பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029மாசி 19 செவ்வாய்க்கிழமை (03-03-1998) UTHAYAN– A Lively National Tamil Daily கதிர்: 82

# அ.தி.மு.க. கூட்டணி தமிழகத்தில் வெற்றி!

## தி.மு.க. - த.மா.கா. கூட்டணி எதிர்பாராத பெரும் தோல்வி

சென்னை, மார்ச் 3

இந்தியாவில் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களில் தமிழகத்தில் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. கூட்டணி பெரு வெற்றியீட்டியிருக்கின்றது. தி. மு. க. — தமிழக மாநில காங்கிரஸ் கட்சிக் கூட்டணி எதிர்பாராத தோல்வியைச் சந்தித்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள 40 நாடாளுமன்றத் தொகுதிகளில் நேற்று நள்ளிரவு வரை 17 தொகுதிகளின் முடிவுகள் வெளியாகியிருந்தன. அதில் 12 இடங்களை அ.தி.மு.க. கைப்பற்றியிருந்தது. எஞ்சிய இடங்களை தி. மு. க. கூட்டணி வென்றது.

தமிழகத்தில் இதுவரை முடிவு வெளியாகாத ஏனைய தொகுதிகளில் அ. தி. மு. க. முன்னணியில் இருப்பதாக செய்தி ஏஜென்சிகள் தெரிவித்தன.

அந்த முடிவுகள் இன்று காலைக்கு முன்னர் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் குஜ்ராலின் அர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மதுரையில் சுவாமி வெற்றி!



மதுரை, மார்ச் 3

மதுரைத் தொகுதியின் முடிவுகளின்படி அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளரான ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி வெற்றி பெற்றார்.

தென் சென்னையில் தி.மு.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அத்வானி முன்னணி!



புதுடில்லி, மார்ச் 3

குஜராத் மாநிலம் காந்தி நகர் தொகுதியில் போட்டியிட்ட பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் லால் கிருஷ்ண அத்வானி தொடர்ந்து முன்னணியில் திகழ்கின்றார்.

அத்வானிக்கு அடுத்தபடியாக அங்கு காங்கிரஸ் வேட்பாளர் பி.டி. தத்தா முன்னணியில் உள்ளார். (ஐ)

## அறுதிப் பெரும்பான்மை பாரதீய ஜனதா பெறுமா?

புதுடில்லி, மார்ச் 3

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளின்படி தனித்து அதிக ஆசனங்களை பெறப்போவது பாரதீய ஜனதாக் கட்சிக் கூட்டணியே என்பது ஓரளவுக்கு நிச்சயமாகிவிட்டது. எனினும் தனித்து ஆட்சி அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மையை பாரதீய ஜனதாக் கட்சியும் அதன் கூட்டணிக் கட்சிகளும் பெற்றுக்கொள்ளுமா என்பது இன்னும் தெளிவற்றதாகவே காணப்படுகின்றது.

ஏனைய வேறு சில உதிரிக் கட்சிகளைச் சேர்த்துக்கொண்டு அறுதிப் பெரும்பான்மையைப் பெற பாரதீய ஜனதாக் கட்சி முயற்சிக்கும் என தெரிகிறது.


பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதமர் பதவி வேட்பாளரான அடல்பிஹாரி வாஜ்பாய்லக்னோ—தெகுாதியில் வெற்றி பெறும் நிலையில் இருந்தார்.

அவரது கட்சிப் பிரமுகர்களான அத்வானி, திருமதி சுஷ்மா சிவராஜ் ஆகியோரும் முன்னணியில் இருந்தனர்.

முன்னாள் பிரதமர் சந்திரசேகர், மமதா பனர்ஜிலாலு பிரசாத் யாதப், மாயாவதி, முலாயம் சிங்யாதப் போன்றோரும் வெற்றி பெறும் நிலையில் இருந்தனர்.

பூலான்தேவி, அஜித்சிங் போன்றோர் தோல்வியைத் தழுவும் நிலையில் இருந்தனர். (உ-9)

## ஜலந்தரில் குஜ்ரால்



புதுடில்லி, மார்ச் 3

பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் பஞ்சாப்பின் ஜலந்தர் தொகுதியில் அமோக வெற்றியீட்டினார்.

காங்கிரஸ் வேட்பாளர் உம்ரால் சிங்கைவிட குஜ்ரால் ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 839 வாக்குகள் கூடுதலாகப் பெற்றார்.

## சிவகங்கையில் சிதம்பரம்

சென்னை, மார்ச் 3

தமிழ் நாட்டில் வெளியான முதலாவது தேர்தல் முடிவு தி.மு.க. கூட்டணிக்குச் சாதகமாக இருந்தது.

மத்திய நிதி அமைச்சர் பழனியப்பன் சிதம்பரம் சிவகங்கைத் தொகுதியில் தமது பிரதான போட்டியாளரான அ. தி. மு. க. வேட்பாளர் கே. காளிமுத்துவை 59 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார்,

மத்திய சென்னைத் தொகுதியில் தி. மு. க. வேட்பாள

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சிகள் நிலை

புதுடில்லி, மார்ச் 3

இந்தியப் பொதுத் தேர்தலில் நேற்று நள்ளிரவு 514 தொகுதிகளில் முன்னணியில் நிற்கும் கட்சிகளின் விவரங்கள் வெளியாகியிருந்தன. அதன்படி ஒவ்வொரு கூட்டணியும் முன்னணியில் நிற்கும் தொகுதிகளின் கட்சி நிலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ தேர்தல் நடந்தவை | — 543 |
| ★ விவரம் தெரிந்தவை | — 514 |
| ★ பாரதீய ஜனதா | — 252 |
| ★ காங்கிரஸ் | — 148 |
| ★ ஐ. முன்னணி | — 96 |
| ★ ஏனையவை | — 18 |

(உ)

## சிவகாசியில் வை. கோ.

சென்னை, மார்ச் 3

தமிழ் நாட்டில் சிவகாசி மக்களவைத் தொகுதியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி வெற்றியீட்டினார்.

இந்திய கம்யூனிஸ்ட் வேட்பாளரை விட அவர் சுமார் ஒரு லட்சத்து 34 ஆயிரம் வாக்குகள் அதிகம்பெற்றிருந்தார்.

## ஸ்ரீ பெரும்புதூரில் அ. தி. மு. க.

சென்னை, மார்ச் 3

தமிழ் நாட்டில் அனைவரது கவனத்தையும் ஈர்த்த ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் கே. வேணுகோபால் 5 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கௌடாவும் தெரிவு!

புதுடில்லி, மார்ச் 3

முன்னாள் பிரதமர் எச். டி. தேவகௌடா ஹஸ்சன் தொகுதியில் பிரதான போட்டியாளரான காங்கிரஸ் வேட்பாளரைத் தோற்கடித்து வெற்றியீட்டியுள்ளார்.

காங்கிரஸ் வேட்பாளர் ஸ்ரீ காந்த் ஐயாவைவிட 31 ஆயிரம் வாக்குகள் கூடுதலாகப் பெற்றார். (ஐ)

## துரையப்பா ஸ்ரேடியம் நேற்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3

புனரமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் துரையப்பா ஸ்ரேடியம் நேற்றுப் பிற்பகலில் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இராணுவத்தின் 51 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் தளபதி பிரிகேடியர் சாந்த கொட்டேகொட இந்த விளையாட்டரங்கை திறந்து வைத்தார்.

யாழ். நகர இராணுவத் தளபதி பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ், யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன், யாழ். பல்கலைக் கழகத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக நிலைவரம்

சென்னை, மார்ச் 3

தமிழ் நாட்டில் 39 தொகுதிகளிலும் பாண்டிச்சேரியிலும் நடைபெற்ற தேர்தல்களில் 17 தொகுதிகளுக்கான முடிவுகள் நேற்று நள்ளிரவு வரை வெளியாகின. அதன்படி கட்சிகளின் நிலைமை வருமாறு:-

| | | |
|---|---|---|
| ● தேர்தல் நடந்தவை | | — 40 |
| ● முடிவு வெளியானவை | | — 17 |
| ★ அ. தி. மு. க. | — 7 | |
| ★ ம. தி. மு. க. | — 1 | |
| ★ ஜனதா | — 1 | |
| ★ பாரதீய ஜனதா | — 1 | |
| ★ பாட்டாளி ம. க. | — 1 | |
| ● அ. தி. மு. க. கூட்டணி | | — 11 |
| ★ தி. மு. க. | — 3 | |
| ★ தமிழ் மாநில காங்கிரஸ் | — 2 | |
| ★ இ. கம்யூனிஸ்ட் கட்சி | — 1 | |
| ● தி. மு. க. கூட்டணி | | — 06 |

பிந்திக் கிடைத்த தகவல்களின்படி தமிழகத்தில் 39 தொகுதிகளில் 28 தொகுதிகளினைக் கைப்பற்றும் நிலையில் அ. தி. மு. க. கூட்டணி இருந்தது.

(உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா இராசலிங்கம்

(பாலு)

(முன்னாள் உப தபால் அதிபர்
கோணாவில், கிளிநொச்சி)

கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இராசலிங்கம் 01 – 03 – 98 இல் காலமானார்.

அன்னார் வள்ளிநாயகியின் அன்புக் கணவரும், முகுந்தன், வனிதா, கோகுலன், பிருந்தா ஆகியோரது பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02–03–98 அன்று மிருசுவில் வடக்கில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. சிறி
(பெறாமகன்)

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(53767)

## தங்கவடிவேல் ராஜ்குமார்

[குமரன் விடுதி உரிமையாளர், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக்கொண்ட தங்கவடிவேல் ராஜ்குமார் 22-02-98 அன்று சென்னையில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கவடிவேல், தங்கவடிவேல் யோகநாயகியின் அன்பு மகனும், சிறிஜெயந்தியின் அன்புக் கணவரும், செந்தில்குமரன், சிறிலக்ஷ்மி ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. சிவகுருநாதன், திருமதி சிவகுருநாதன் அவர்களின் அருமை மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சென்னையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சத்தியதாசன்
(முகாமையாளர்
குமரன் ரூறிஸ்ற் இன்
யாழ்ப்பாணம்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

(53776)

பண்டிதர்

## கந்தையா வயிரவப்பிள்ளை

(புற்றளை, புலோலி)

தென்புலோலியூர் புற்றளையைச்சேர்ந்த பண்டித புலவ வித்துவான் கெ. வயிரவனார் என அழைக்கப்படும் க. வயிரவப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் 28 — 02 — 1998 அன்று இரவு 10. 00 மணியளவில் சிவபதம் எய்தினார்.

அன்னார் குருநாகல் ‘கண்டி ஸ்ரோர்ஸ்’, கண்டி ‘லங்கா ஸ்ரோர்ஸ்’ ஆகியவற்றின் முன்னாள் பங்காளரும், யா / பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை முன்னாள் ஆசிரியரும், புற்றளை சித்தி விநாயகர் ஆலய முன்னாள் நிர்வாக சபை உறுப்பினரும், புற்றளை சனசமூக நிலைய ஸ்தாபகரும், திருமதி வ. அன்னம்மா அவர்களின் அன்புக் கணவரும் திருமதி ம. கோப்பெருந்தேவி (முன்னாள் ஆசிரியர், புற்றளை மகா வித்தியாலயம்), திரு. வ. சிவச்சந்திரதேவன் (மக்கள் வங்கி, நெல்லியடி), திரு. வ. சிவச்சூரியதேவன் (B. Sc), திருமதி வி. மெல்லியல், செல்வி. வ. செம்மனச் செல்வி (ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி), திரு. வ. சிவஅக்கினிதேவன், திரு. வ. சிவசிம்மதேவன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01 — 03 — 1998 அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. அன்னம்மா
(மனைவி)

புற்றளை,
புலோலி தெற்கு,
புலோலி.

( சி/3016 )

## சவிரிமுத்து அருமைநாயகம் டோமினிக்

(இளைப்பாறிய ஓவசியர்—நீர்கொழும்பு)

கரம்பனைப் பிறப்பிடமாகவும், நீர்கொழும்பில் வசித்தவருமாகிய சவிரிமுத்து அருமைநாயகம் டோமினிக் 28–2–98 அன்று காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து எலிசபெத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சவிரிமுத்து மேரிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், திரேசாவின் அன்புக் கணவரும், சுமீந்திரன், சாமிளா. சுரேஸ், செல்வின், சுபிர்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிசில், ஜெம்மா, பிரான்சிஸ் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், லூர்து, காலஞ்சென்றவர்களான றோசலின், மரியாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை, றெஜினா ஆகியோரின் அன்புச் சகோதரரும், லோரன்ஸ், அகஸ்ரின், ராசமணி, காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, ரெத்தினம், வேந்தக்கோன், துரைநாயகம் ஆகியோரின் மைத்துனரும், சின்ஸ்கா, சரூன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நீர்கொழும்பு, கடற்கரை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் 2–3–98 அன்று நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
சிசில்
(மருமகன்)

சிற்றி மெடிக்கல்,
யாழ்ப்பாணம்.

(53786)

## சமய நிகழ்வில்

குருநகர், மார்ச் 3

சற்கோட்டை புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலய வருடாந்த கொண்டாட்டம் நாளை புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஒன்பது நாள் ஆராதனைகளைத் தொடர்ந்து இந்த மாதம் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு திருநாள் திருப்பலியும் திருச்சொருபபவனியும் இடம்பெறும். (ஐ-51)

## மாணவரை விசர் நாய் கடித்தது

தென்மராட்சி, மார்ச் 3

ரியூசனுக்குச் சென்று திரும்பிய இரு மாணவர்கள் விசர் நாயினால் துரத்திக் கடிக்கப்பட்ட சம்பவம் நேற்று முன்தினம் மட்டுவில் வடக்கில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த எஸ். சிறிகுமார் (வயது 13), த. காந்தன் (வயது 7) ஆகிய இரு மாணவர்களே விசர் நாயினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வீதியில் வந்த மேலும் ஒருவரைக் கடிக்க முயன்ற அந்த விசர் நாய் அடித்துக் கொல்லப்பட்டது. (ஐ–117)

விற்பனைக்கு

பிறிமா, புறொயிலர் குஞ்சும், பேட்டுக் குஞ்சும் இன்று 3 ஆம் திகதி காலை விநியோகிக்கப்படும். பதிவு செய்தவர்கள் உடன் வரவும்.

LUCKY FARM,
Palaly Road,
Thirunelvely (53785)

பற்கள் வெண்மை பெற
வாய் நாற்றம் நீங்க
ESB
சுப்ப(ர்)
பற்பொடி
தயாரித்து
விநியோகிப்போர்;
ESB தொழிலகம்
கொழும்புத்துறை.
(சி/3015)

நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
முரளி — சுபலட்சுமி
நடித்த
தினந்தோறும்
காட்சிகள்: 10-30, 2-30
( பழைய நேரம் )
(சி/2756)

லிபேட்டி சினிமா
அச்சுவேலி.
35 அடி அகலத் திரையில்
இன்று முதல்
விக்னேஸ் - தேவயானி
நடித்த
காதலி
வெள்ளிக்கிழமை
M. G. R. நடித்த
இதயக்கனி
(புதிய பிரதி)
பழைய நேரம்
10-30, 2-30
(53059)

வடமராட்சியில்

## பீரங்கித் தாக்குதலில் மீனவர் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

கரையோரமாகக் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை நோக்கி கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலினால் மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். ஏனைய மீனவர்கள் நீரில் மூழ்கியும், கரைப்பகுதியை நோக்கி ஓடியும் காயமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

வடமராட்சி, பருத்தித்துறை கற்கோவளம் கடற்பரப்பிலேயே நேற்று அதிகாலை 6·00 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் கற்கோவளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் லவன் (வயது–21) என்ற மீனவரே படுகாயமடைந்தவராவார்.

அதிகாலை வேளை கரையோரப் பகுதியில் கட்டுமரங்களில் கடற்றொழில் செய்யச் சென்றிருந்த கடற்றொழிலாளர்களை நோக்கியே தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடற்படையினரின் மூன்று பீரங்கிப்படகுகள் அப்பகுதியில் காணப்பட்டதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார். (ஐ–15)

## இளம் பெண் காயம்

கணவனால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்து இளம் பெண் ஒருவர் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கோண்டாவில் கிழக்கில் நேற்று இடம்பெற்ற இச் சம்பவத்தில் வசந்தகுமார் சுதர்சினி (வயது 24) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ஐ–15)

## கண்ணீர் அஞ்சலி

### கந்தையா செல்வநாயகம்

(மின்கம்பி இடுபவர் சகா, வலி. கிழக்கு பிரதேச சபை
உரும்பிராய் உப அலுவலகம்.)

எமது அலுவலகத்தில் பணி புரியும்

கந்தையா செல்வநாயகம் அவர்கள்

01–03-98 அன்று சிவபதம் அடைந்துவிட்டார் என்ற துயரச் செய்தி அறிந்து நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

பொறுப்பதிகாரியும் உத்தியோகத்தர்களும்.

(49978)

புலமைப் பரிசில் வகுப்பு
(1998)
புதிய மாணவர்களை அனுமதித்தல்

- 1999 - 01 - 31 ஆம் திகதி 10 வயதுக்கு மேற்பட்டவராகவும், 11 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வாரத்தில் 6 நாள்கள் வகுப்புகள்.
- வாராந்தப் பயிற்சிப் பரீட்சைகளுடன்.

விவரங்களுக்கு:
BOND யாழ். நகர்.
(53787)

# மரண அறிவித்தல்

## விசுவலிங்கம் பூதப்பிள்ளை

(இளைப்பாறிய தொலைத் தொடர்பு
உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்.)

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவிலை வசிப்பிடமாகக் கொண்டவருமான விசவலிங்கம் பூதப்பிள்ளை காலமானார்.

இவர் காலஞ்சென்ற விசுவலிங்கம் தெய்வானைப் பிள்ளையின் அன்பு மகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், சோதிநாதன் (லண்டன்), சத்தியநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவஞானம் (இளைப்பாறிய அலுவலர், இலங்கை வங்கி, திருகோணமலை), நாகரத்தினம் (புன்னாலைக்கட்டுவன்), விசாகப்பெருமாள் (சோலைவரி உத்தியோகத்தர், திருகோணமலை), காலஞ்சென்ற சரசுவதி (மருத்துவ மாது, மட்டக்களப்பு) ஆகியோரின் சகோதரரும், மகேந்திரன், இரத்தினசிங்கம், இராசநாயகம், குணலிங்கம் (புத்தளம்), செல்வரத்தினம் (ஜெயந்தன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று (3 – 3 - 98) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோண்டாவில் கிழக்கு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பொ. செல்வரத்தினம்
(ஜெயந்தன்)
(மைத்துனர்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

[53788]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆயிரத்து 400 நிலையங்களில்

# பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் வாக்குகள் எண்ணும் பணி ஆரம்பம்

புதுடில்லி, மார்ச் 3

இந்தியாவில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் வாக்குகள் எண்ணும் பணி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நேற்றுக் காலை ஆரம்பமாகின.

வாக்குகளை எண்ணுவதற்காக நாடு முழுவதும் உள்ள 870 இடங்களில் ஆயிரத்து 400 நிலையங்கள் அமைக்கப் பட்டுள்ளன,

வாக்குகளை எண்ணுவதில் நவீன வழி முறைகள் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால் தேர்தல் முடிவுகள் வெகு விரைவாக வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அடிக்கடி இடம் பெற்று வரும் தமிழ்நாடு, ஆந்திரா, அஸாம் ஆகிய இடங்களில் வாக்குகள் என்னும் பணியை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முக்கிய இடங்களில் பொலீஸார் கடமையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பிடத்தக்க அளவு வன்முறைச் சம்பவம் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

(இ)

## பிரேமானந்தாவின் பிணை மனு நிராகரிப்பு

சென்னை, மார்ச் 3

கொலை மற்றும் கற்பழிப்பு வழக்கில் ஆயுள் தண்டனை அடைந்த பிரேமானந்தாவின் பிணை மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அபராதத் தொகை ரூ. 36 லட்சத்தை புதுக்கோட்டை நீதிமன்றத்தில் அவர் செலுத்த வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

திருச்சிக்கு அருகே பாத்திமா நகரில் ஆசிரமம் நடத்தி வந்த பிரேமானந்தா இலங்கையைச் சேர்ந்தவர் என்பதும்—

அந்த ஆசிரமத்தில் தங்கியிருந்த 13 பெண்களைக் கற்பழித்ததாகவும் ரவி என்பவரைக் கொலை செய்ததாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டதும் தெரிந்தவையே.

இவ் வழக்கில் மொத்தம் 7 பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

பிரேமானந்தாவுக்கு இரண்டு ஆயுள் தண்டனைகள் விதிக்கப்பட்டன. 66 இலட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட 13 பெண்களுக்கு இத்தொகையில் இருந்து 5 இலட்சம் ரூபாவைத் தர வேண்டும் என்று புதுக்கோட்டை செஷன்ஸ் நீதிபதி தீர்ப்பு வழங்கி இருந்தார்.

கமலாநந்தா, பாலன், மயில்வாகனன், நந்தகுமார், சுரேஷ், சுந்தரவதனம் ஆகியோருக்கும் தண்டனை விதிக்கப்பட்டது.

இதை எதிர்த்து இவர்கள் உயர் நீதிமன்றத்தில் அப்பீல் மனுத் தாக்கல் செய்தனர்.

அப்பீல் மனு விசாரணை முடியும் வரை தங்களை பிணையில் விடுவிக்க வேண்டும் என்றும் அபராதத் தொகையை ரத்துச் செய்ய வேண்டும் என்றும் கோரினார்.

நீதிபதிகள் சிர்புர்கர், ஏ. ராமன் ஆகியோர் இம்மனுவை விசாரித்து வியாழக்கிழமை அளித்த தீர்ப்பில் மயில் வாகனன் தவிர மற்றவர்களை பிணையில் விடலாம் என்று தெரிவித்தனர்.

பிரேமானந்தாவுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தில் 36 லட்சத்தை மட்டும் புதுக்கோட்டை நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும் என்றும் அத்தொகையை வங்கியில் வைப்புச் செய்து அதன் வட்டியை பாதிக்கப்பட்ட 13 பெண்களுக்கும் தரவேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

(இ-10)

### உலக அரங்கில்

## குண்டு வெடிப்பு

பாகிஸ்தானில் பஞ்சாப் மாநிலத்தின் கூஜ்ரன்வாலா நகரில் பயணிகள் மோட்டார் வான் ஒன்றில் குண்டு வெடித்தபோது குறைந்தது நால்வராவது கொல்லப்பட்டிருப்பதாகவும், 16 பேருக்கு காயமேற்பட்டிருக்கிறது என்றும் பாகிஸ்தான் பொலீஸார் அறிவித்திருக்கிறார்கள்.

ஹைதராபாத்துக்கு அருகே ரயில் ஒன்றில் குண்டு வெடித்து நால்வர் கொல்லப்பட்டு, சுமார் 25 பேருக்கு காயம்பட்ட சம்பவம் நடந்து ஒரு சில மணி நேரத்தில் இந்த மோட்டார் வான் குண்டு வெடித்திருக்கிறது.

(இ-8)

### உத்தரப் பிரதேச ஆளுநர்

## றொமேஷ் பண்டாரி மீதான அவமதிப்பு வழக்கு இன்று

அலகாபாத், மார்ச் 3

உத்தரப் பிரதேச ஆளுநர் றொமேஷ் பண்டாரி, லோகதந்திர காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜெகதாம்பிகா பால் ஆகிய இருவர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு இன்று செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வருகிறது.

விஸ்வ ஹிந்து பரிஷத் பிரமுகர் எல். எம். திவாரி இவ் வழக்கை அலகாபாத் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

அலகாபாத் உயர்நீதிமன்றம் கல்யாண் சிங்குக்கு சாதகமான தீர்ப்பை வழங்கிய பின்னரும் முதல்வரின் அறையிலிருந்து வெளியேற ஜெகதாம்பிகா பால் மறுத்தார். ஆளுநர் றொமேஷ் பண்டாரியும் இது தொடர்பான அறிவுறுத்தலை அவருக்கு வழங்கவில்லை. இருவரும் நீதிமன்ற உத்தரவை அவமதித்துள்ளனர் என எல். எம். திவாரி தனது மனுவில் கூறியிருந்தார்.

(இ-10)

### ஜெயின் கமிஷனுக்கான

## கோப்புக்கள் ஆவணங்கள் அரசிடம் மிச்சம் இல்லை

புதுடில்லி, மார்ச் 3

ராஜீவ்காந்தி கொலை வழக்கின் சதியின் பின்னணி பற்றி ஆராய அமைக்கப்பட்ட ஜெயின்ஷமிசனுக்கு அளிக்கப்படவேண்டிய கோப்புக்கள், ஆவணங்கள் எதுவும் அரசிடம் மிச்சமாக இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் இத் தகவலை வெளியிட்ட அதிகாரி இதையடுத்து அக்கமிஷனுக்கு மேலும் கால அவகாசம் நீடிக்கப்படமாட்டாது என்று அரசு அறிவித்துள்ளதாகத் தெரிவித்தார்.

இன்னும் ஒரு வார காலத்துக்குள் தமது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜெயின் கமிஷன் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-3)

## ராஜீவ் வழக்கை மீண்டும் விசாரிக்கக் கோரிக்கை

சென்னை மார்ச் 3

ராஜீவ் காந்தி கொலை வழக்கை ஏற்கனவே விசாரித்த கீழ் நீதிமன்றத்திலேயே மீண்டும் விசாரிக்க வேண்டும் என்று மனித உரிமைக் கழகம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

ராஜீவ் வழக்குத் தீர்ப்பு குறித்து இக்கழகத்தின் சார்பில் பொதுக் கூட்டம் அண்மையில நடைபெற்றது.

ராஜீவ் கொலை வழக்கில் 95 சதவீத சாட்சியங்களை விசாரித்த நீதிபதி சித்திக் இடையில் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். 5 சதவீதம் சாட்சியங்களைக் கேட்ட நவநீதம் 2 ஆயிரம் பக்கத் தீர்ப்புக் கூறினார்.

வழக்கு விசாரணைகள் நடைபெறும் போது இடையிலேயே நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்படக் கூடாது. மேல் நீதிபதிமன்றத்தில் முறையீட்டு விசாரணை நடைபெறும் போது கீழ் நீதிமன்றத்தில் அத்தீர்ப்பை வழங்கிய நீதிபதிக்கு பணி உயர்வு அளிக்கக் கூடாது.

நீதிமன்ற அவமதிப்புச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட பல தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

(இ-10)

# தி.மு.க. இடம் பெறாத கூட்டரசு மத்தியில் உருவாவதற்கு வாய்ப்பு

## இந்திய தேர்தல் நிலவரம் குறித்து அவதானிகள் கருத்து

மக்களவைத் தேர்தலில் எந்த அணிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலை ஏற்படுமானால், பாரதீய ஜனதாவைக் காட்டிலும் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி அமைய வாய்ப்புகள் அதிகம் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்தகைய சூழ்நிலையில், தி. மு. க., தெலுங்கு தேசம், அசாம் கண பரிஷத் ஆகிய மூன்று கட்சிகளும் தங்களது முக்கியத்துவத்தை இழக்கும் நிலை ஏற்படக் கூடும்.

கலைக்கப்பட்ட மக்களவையில் காங்கிரஸ் கட்சி 143 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. சோனியாவின் பிரசாரம் காரணமாக அக்கட்சி கூடுதல் இடங்களைப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மார்க்சிஸ்ட் கட்சிப் பொதுச் செயலர் ஹர்கிஷன் சிங் சுர்ஜீத் கூட, காங்கிரஸ் கூடுதலான இடங்களில் வெற்றி பெறும் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்.

குறைந்தபட்சம் 175 தொகுதிகளில் வெற்றி நிச்சயம் என்று காங்கிரஸ் கட்சி எதிர்பார்க்கிறது. அதன் கூட்டணிக் கட்சிகளான ராஷ்ட்ரீய ஜனதா தளம் (லாலு), பகுஜன் சமாஜக் கட்சி, இந்தியக் குடியரசுக் கட்சி ஆகியவை குறைந்தபட்சம் 25 தொகுதிகளில் வெற்றி பெற்றாலும், காங்கிரஸ் அணியின் பலம் 200–க்கும் அதிகமாக, இருக்கும்.

எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் காங்கிரஸ், ஐக்கிய முன்னணி இரண்டும் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டும் என்று மூப்பனார் ஏற்கெனவே கூறியிருக்கிறார். பார்தீய ஜனதா ஆட்சிக்கு வருவதைத் தடுத்து நிறுத்த காங்கிரஸ் கட்சி ஆட்சி அமைக்க ஆதரவளிக்கத் தயார் என்று முலாயம் சிங் யாதவும் கூறியுள்ளார்.

இவர்களது கட்சிகள் குறைந்தது 40 இடங்களில் வெற்றி பெறும் வாய்ப்பு உள்ளதாகக் கணிக்கப்படுகிறது. இவர்களது ஆதரவும் காங்கிரஸ் கட்சிக்குக் கிடைக்கும் நிலையில் அதன் பலம் 250 ஐ நெருங்கிவிடும்.

பாரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சியும் தனக்கு ஆதரவளிக்கும் என்று காங்கிரஸ் எதிர்பார்க்கிறது.

கலைக்கப்பட்ட மக்களவையில் 56 உறுப்பினர்களைக் கொண்டிருந்த இடது சாரிக் கூட்டணி இந்த முறை குறைந்தபட்சம் 50 தொகுதிகளில் வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அணியின் ஆதரவு இல்லாமல் அடுத்த அரசு அமைய முடியாது என்ற நிலை உருவாகும் வாய்ப்பு உள்ளது.

அப்படிப்பட்ட நிலையில் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வருவதைத் தடுக்க பிரச்சினைகளின் அடிப்படையில் காங்கிரஸ் கூட்டணிக்கு ஆதரவளிக்க வேண்டிய நிலைக்கு இடது சாரிக் கூட்டணி தள்ளப்படும். எனவே காங்கிரஸ் தலைமையில் கூட்டணி அரசு அமைவது நிச்சயம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காங்கிரஸை நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஆதரிக்க முடியாத நிலையில் தெலுங்கு தேசம், தி.மு.க, அசாம் கண பரிஷத் ஆகிய கட்சிகள் உள்ளன. இந்த நிலையில் அவை பாரதீய ஜனதாவுக்கு ஆதரவளிப்பதும் சாத்தியமல்லாத நிலை உள்ளது. தமிழகத்தில் அ.தி.மு.கவுடனும் ஆந்திரத்தில் சிவபார்வதியின் தெலுங்கு தேசம் கட்சியுடனும் கூட்டணி வைத்துக் கொண்டதன் மூலம் அத்தகைய வாய்ப்புக்கு பாரதீய ஜனதாவே முட்டுக்கட்டை போட்டு விட்டதாகக் கருதப்படுகிறது.

எனவே தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய முன்னணி உடைவதும் காங்கிரஸ் தலைமையில் கூட்டணி ஆட்சி அமைவதும் உறுதி என்று அரசியல் பார்வையாளர்கள் கணித்துள்ளனர்.

(இ-10)

## பாகிஸ்தான் கண்டனம்

இஸ்லாமாபாத், மார்ச் 3

இந்தியாவக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பதற்ற நிலையைத் தோற்றுவிக்க பாரதீய ஜனதாக் கட்சி முயன்று வருவதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் கோஹார் அயூப்காண் குற்றஞ்சாட்டியுள்ளார்.

காஷ்மீர் மாநிலத்தின் சர்ச்சைக்குரிய பகுதியை தாங்கள் ஆட்சிக்கு வந்தால் மீண்டும் கையேற்கப் போவதாக பி. ஜே. பி. தலைவர் அடல்பிஹாரி வாஜ்பாய் தேர்தல் பிரசாரத்தின் போது தெரிவித்திருந்தார்.

இது பற்றிக் கருத்து வெளியிட்ட பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் இத்தகைய பொறுப்பற்ற கூற்றுக்களால் இருதரப்பிலும் பதற்றமும், சந்தேகமும் மேலும் அதிகரிக்கும். இந்த விவகாரத்தை இணக்கமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதில் இந்தியா கொண்டுள்ள ஈடுபாட்டையும் இது சந்தேகத்துக்கு உரியதாக்கி விடும் என்று தெரிவித்தார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிலங்குளம் ஊடாக வருவோர் வவுனியாவுக்கு நேரடியாக அனுமதி

## வியாழன் முதல் புதிய நடைமுறை அமுலாகும்

வவுனியா, மார்ச் 3

இராணுவக் கட்டுப்பாட்டில் இலலாத வன்னிப் பகுதியில் இருந்து உயிலங்குளம் ஊடாக வருவோரை எதிர் வரும் 5 ஆம் திகதி முதல் வவுனியாவுக்கு நேரடியாகச் செல்ல அனுமதிக்க படை அதிகாரிகள் இணங்கியுள்ளனர் என்று மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்குள் 125 பேர் மட்டுமே தற்போது அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். ஏனையோர் திருப்பி அனுப்பப்பட்டு வந்தனர். அவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டு மன்னார் வந்தோரில் 186 பேர் வவுனியா செல்வதற்காக காத்து நிற்கின்றனர்.

தம்மை வவுனியாவுக்கு அனுப்பக்கோரி இவர்கள் மன்னார் செயலகத்தில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து மன்னார் மேலதிக அரச அதிபர் எஸ். விஸ்வலிங்கம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டார்.

இந்த 186பேரையும் பகுதி பகுதியாக வவுனியாவுக்கு அனுப்பி வைப்பதற்கு ஒழுங்குகளைச் செய்தார்.

அத்தோடு இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்குள் 125 பேர் மட்டுமே அனுமதிக்கப் படுவதனாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளது என்றும் —

வவுனியா செல்ல விரும்புவோரை நேரடியாக வவுனியாவுக்கு அனுப்பினால் இந்நிலை ஏற்படாது என்றும் — சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறினார்.

இதனை அடுத்தே எதிர் வரும் 5 ஆம் திகதி முதல் இந்தக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு உயிலங்குளம் ஊடாக வருவோரில் எவரையும் திருப்பி அனுப்பாமல் முழுப் பேரையும் நேரடியாக வவுனியாவுக்குள் அனுமதிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (இ-164-9)

## ஆலய துப்புரவு பணி

சண்டிலிப்பாய், மார்ச் 3

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தை துப்புரவு செய்து புனரமைப்பதற்கு அப் பகுதி மக்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த ஏழு வருட காலமாக இங்கு உற்சவங்கள் எதுவும் நடைபெறாது இருந்து வருகின்றது.

(இ-135)

## செஞ்சிலுவைக் கப்பல் 6 ஆம் திகதியே திரும்பும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

திருகோணமலையில் இருந்து இன்று வரும் செஞ்சிலுவைச்சர்வதேசக் கப்பல் மீண்டும் எதிர்வரும் 6 ஆம் திகதியே திருகோணமலை நோக்கிப் புறப்படும் என்று யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்சிகிச்சை பெற்றுத் திரும்புபவர்களுடன் வரும் இக் கப்பல் வழமை போல் இன்றே திரும்பாது என்றும் எதிர்வரும் 6 ஆம் திகதியே இக்கப்பல் திரும்பிச் செல்லவிருப்பதால், இன்று கப்பலில் பயணம் செய்ய பதிவு செய்தவர்களை அன்றே வரும்படியும்—அவர் மேலும் தெரிவித்துள்ளார்,

(இ-3)

## காவலாளி உட்பட இருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 3

விடுதலைப் புலிகளுக்குத் தகவல் கொடுப்பவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மாகாண கல்வி அமைச்சுக் காவலாளி உட்பட இருவர் திருகோணமலைப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

மாகாண கல்வி அமைச்சுக் காவலாளியான கட்டைபறிச்சானைச் சேர்ந்த காளிராசா கிருஷ்ணராஜா, சம்பூர் வாசியும் தனியார் வைத்தியசாலை ஊழியருமாகிய எஸ். செல்வராஜா ஆகியோரே கைதானவர் ஆவர்.

(இ-27)

## இலவச மாலை நேர வகுப்பு

செம்பியன்பற்று, மார்ச் 3

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் தென்இந்திய திருச்சபை இப்பகுதி மாணவர்களின் நலன்கருதி ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரையான மாணவர்களுக்கு இலவச மாலை நேரவகுப்புக்களை நடத்தி வருகிறது. கணிதம். விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

இவ் வகுப்புகளினால் குடத்தனை, மணற்காடு, அம்பன், நாகர்கோயில், விழாங்காடு பகுதி மாணவர்கள் பெரிதும் நன்மையடைந்து வருகின்றனர்.

(இ-36)

## பண்ணிசை

சண்டிலிப்பாய், மார்ச் 3

சங்கானை வெல்வில் அறநெறி பாடசாலையினர் வெள்ளிக்கிழமைகள் தோறும் பாடசாலை மண்டபத்தில் கூட்டுப்பிரார்த்தனை, பஜனை, பண்ணிசை ஆகிய நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர்.

(இ-135)


## கண்ணீர் அஞ்சலி

அருட்தந்தை செபஸ்ரியான் குரூஸ்
(திருவுளச்சபை)
அடிகளாரின் அன்புத்தாயார்
திருமதி
ஹார்த்தம்மா லாசரன் குரூஸ்

28–2–98 அன்று வைகாலை மன்னாரில் காலமாகி விட்டார். அவரது மறைவையொட்டி துயருறும் அருட்தந்தை அவர்கட்கும், அவரது சகோதரருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குருக்கள், கன்னியர்,
திருவுளச் சபை உறுப்பினர்.

கொழும்புத்துறை. (53774)



## 31 ஆம் நாள் நினைவுகளில்



அமரர் பரராஜசேகரம் சரவணமுத்து
(நேவி)
(இளைப்பாறிய கடற்படை அலுவலர்)

மானிடனாய்: 07–12–1937
தெய்வமாய்: 01–02–1998

பாசமுள்ள அப்பாவே!
எம் மனதில் நிறைந்தவரே!
எவராலும் எம் துயரைத்
துடைக்க முடியாதையா
சொர்க்கத்தில் நீங்கள் சுகமாய்வாழ
நித்தம் நாம் பிரார்த்திப்போம்.

இன்று (03-03-98) அவரின் இல்லத்தில் ஆத்ம சாந்திக் கிரியைகள் நடைபெறும்.

அன்பு மனைவி,
அன்பு மகன் ச. செந்தில்குமரன்

சங்கத்தானை,
சாவகச்சேரி. (சி/3007)



## தேவை

பார்மஸி அனுபவமுள்ள பெண்
மற்றும் அனுபவம் அற்ற ஆண் மற்றும் காசாளர் தேவை.

தற்பொழுது திருநெல்வேலி மற்றும் யாழ். நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது நிறுவனத்திற்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்பு கொள்ளும் நேரம்:
03-03-98, 04-03-98
9 மணிமுதல் 4 மணிவரை.

தொடர்பு:
குறிஞ்சி பார்மசி
இல. 558, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(53780)



## 2 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்



செல்வன்
மகேந்திரன் பிரேமானந்

ஆண்டவன் தந்தார்: 1979–07–01
அவரே அணைத்தார்: 1996–03–03

எம் இனிய செல்வமே!
ஈராண்டு கழிந்தாலும் கண்ணில்
நீரோடுவது நிற்கவில்லை. உன் நினைவால்
போராடுகிறோம் நிம்மதியிழந்து நாளெல்லாம் –
உன் பிரிவால்
வேரோடு சாய்ந்தது எம்மகிழ்ச்சி
நாளெல்லாம் உன் நினைவு, பொழுதெல்லாம்
உன் கனவு
அன்பைக் காட்டினாய், ஆசை காட்டினாய்,
பாசம் காட்டினாய்
பதினாறு முடிந்ததும் பறந்தோடி விட்டாய்
எம் செல்வமே!
நாளெல்லாம் உன் நினைவு பொழுதெல்லாம்
உன் கனவு
கண்ணீர்க்கடலில் நாம் மூழ்க தண்ணியுமின்றி
சென்றாயோ!
முத்தான மூத்த செல்வமே! பிரேம் பிரேம் என
தவிக்கும்
அப்பம்மாவின் அழுகுரல் இன்னும் மாறவில்லையே!
அனைவரும் உனைஎண்ணி அல்லும் பகலும்
உருகுகிறோம்.
உன் பிரிவால் உணர்விழந்து எம் உயிர் பிரிந்தது
போல் வாடுகிறோம்.
ஆறுதல் தர யாருண்டு எம் செல்வமே!
உன் ஆத்மா சாந்தியடைய பகவானை
வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:
அப்பம்மா, அப்பா, அம்மா,
சகோதரர்கள், சித்தப்பா, மாமாமார்,
அத்தைமார், மச்சாள், அத்தான்மார்.

இல. 26/2 A, கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (53779)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணியில் கைதான நால்வரும் இன்றுவிடுதலை

நெடுங்கேணியில் வீடு பார்க்கச் சென்ற சமயம் கைதான நால்வரும் இன்று விடுதலையாக இருக்கின்றனர்.

கடந்த மாதம் நெடுங்கேணியில் உள்ள தமது வீடுகளைப் பார்வையிடச் சென்ற சமயம் கைது செய்யப்பட்ட நால்வரும் ஹெப்பிட்டிக் கொலாவ நீதிமன்றத்தால் இன்று விடுதலை செய்யப்படவிருப்பதாகவும் —

அவர்களைப் பொறுப்பேற்று வன்னியில் அவர்களது உறவினர்களிடம் கையளிக்குமாறும் — வவுனியா செஞ்சிலுவைச் சங்க தலைவர் சிவநாதன் கிஷோரிடம் பொலீஸார் கேட்டுள்ளனர்.

(இ-164-3)

# ஐ. தே. கவின் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க சுயாதீன ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 3

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது ஐ. தே. க. சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களை விசாரிக்க சுயாதீன ஆணைக்குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் இருவர் உட்பட சில உறுப்பினர்களையும் கொண்டு ஜனாதிபதியால் இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆணைக் குழு முன்பாக பொதுமக்கள் சாட்சியமளிக்க முடியும் என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த தெரிவித்தார்

(இ-3-9)

# மாற்று யோசனையின் 2 ஆம் பகுதி

# ஐ. தே. க. நாளை சமர்ப்பிக்கும்

கொழும்பு, மார்ச் 3

இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசினால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுத் திட்ட யோசனைகளுக்கு ஐ. தே. கட்சி முன்வைத்துள்ள மாற்று யோசனைகளின் இரண்டாம் பகுதி நாளை புதன்கிழமை தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இந்த இரண்டாம் பகுதி மாற்று யோசனைகளில் மாகாண சபைகளுக்கான வெளிநாட்டுக் கொள்கைகள், தொலைத் தொடர்பு பரிவர்த்தனை, பொலீஸ் அதிகாரங்கள் உட்பட பல முக்கிய விடயங்கள் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாற்று யோசனைகள் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட இருந்தன.

நேற்று இந்த மாற்று யோசனைகள் நாடாளுமன்ற அங்கத்தவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு அவர்களது கருத்துக்கள் அறியப்பட இருந்தன,

இன்று நாடாளுமன்றக் கூட்டத் தொகுதியில் நடைபெற உள்ள ஐ. தே. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்த யோசனைகள் தொடர்பான விளக்கம் ரணில் விக்கிரமசிங்கவினால் வழங்கப்பட்டு செயற்குழுவின் கருத்தும் அறியப்படும்.

பின்னர் நாளை இரண்டாம் பகுதி மாற்று யோசனைகள் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

இந்த இரண்டாம் பகுதியில் இடம்பெறாத காணிப் பங்கீடு, நிர்வாக அலகுகள், பாதுகாப்பு விடயங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக மூன்றாவதும் இறுதியுமான பகுதி வருகின்ற மாதமளவில் வெளியிடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-9-10)

# தென்மராட்சிப் பகுதியில் சிமெந்துக்குத் தட்டுப்பாடு

தென்மராட்சி, மார்ச் 3

தென்மராட்சிப் பகுதியில் சிமெந்துக்கு பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது.

அண்மையில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கப்பற் கட்டணமின்றி சிமெந்து கொண்டு வரப்பட்டு அனுமதிப்பத்திரம் மூலம் குறைந்த விலையில் வழங்கப்பட்டன. அதனையடுத்து தனியார் வர்த்தகர்கள் சிமெந்தை கப்பல் மூலம் கொண்டு வருவதை நிறுத்தியதை அடுத்தே சிமெந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்டு வைக்கப்யட்டிருந்த சிமெந்துப் பைக்கற்றுக்கள் தற்போதைய தட்டுப்பாட்டினால் முன்னர் விற்ற விலையை விட கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. இது குறித்து மக்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

# கடலில் தத்தளித்த படை அதிகாரியை காப்பாற்றிய ராணுவக் கோப்ரல்!

கொழும்பு மார்ச் 3

கடந்த ஞாயிறு இரவு பருத்தித்துறைக் கடலில் வைத்து படையினரின் இரு கப்பல்களை விடுதலைப் புலிகள் தாக்கினார்கள் அல்லவா?

இந்தத்தாக்குதலின்போது உயிர் தப்பியோரில் சிலர் நீந்திக் கரை சேர்ந்தனர். சிலர் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் ஹெலிக்கொப்டரினால் மீட்கப்பட்டனர்.

வலம்புரி, பவ்வத்த ஆகிய இந்த இரு கப்பல்களிலும் இருந்த படையினரின் உண்மையான எண்ணிக்கை இன்னும் பாதுகாப்புத் தரப்புக்குத் தெரியாதிருப்பதாக சண்டே டைம்ஸ் இராணுவ செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஏனெனில் இந்தக் கப்பல்களில் ஏறிய படையினரில் எத்தனை பேர் தமது பெயர்களைப் பதிவு செய்யாமலே ஏறினார்கள்என்பதுஇன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையாம்.

கப்பலில் வைத்து படையினருக்கு வழங்கப்பட்ட உணவு கார்ட்டுக்களை வைத்து இவர்களின் எண்ணிக்கையைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டபோது கடலில் தத்தளித்தவர்களில் கடற்படை அதிகாரியும் ஒருவர்.

இவருக்கு தலையிலும் காலிலும் காயங்கள் இருந்தன. இவர் காயங்களுடன் நீந்த முடியாத நிலையில் மூழ்க இருந்த சமயம் அங்கு கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ராணுவ கோப்ரல் ஒருவர் அவருக்கு உதவ முன்வந்தார். அந்த ராணுவ கோப்ரலும் காயம் அடைந்திருந்தார்.

தம்மால் மீள முடியாது என்றும் தம்மைக் கைவிட்டுச் செல்லும்படியும் அந்த கடற்படை அதிகாரி கேட்டுக் கொண்டபோதிலும் அந்த ராணுவ கோப்ரல் விடவில்லை. அவரையும் காப்பாற்றி ஹெலிக்கொப்டர் வந்து மீட்கும் வரை கடலில் மூழ்கவிடாது வைத்திருந்தார்.

காயம் அடைந்த படையினர் பலாலி ராணுவ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட போது இந்த இரு படையினரும் அவர்களில் அடங்கி இருந்தனர்.

அந்த கடற்படை அதிகாரி ராணுவ கோப்ரலின் கட்டிலுக்குச்சென்றுஅவரைக் கட்டி அணைத்து தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-10)

## நியமனம்

கொழும்புத்துறை, மார்ச் 3

சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் வடமாகாண பதில் மாகாண ஆணையாளராக, நாகேந்திரம் போஜன் கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் நியமனம் பெற்றுள்ளார். அத்துடன் இலங்கைச் சென்ஜோன்ஸ் அன்புலன்ஸ் சபையின் தேசியக் கவுன்சிலின் ஓர் உறுப்பினராகவும், சென் ஜோன்ஸ் சபையின் தீர்மானத்திற்கமைய சபையின் தலைவர் டன்ஸ்ரன் டி. இ. அல்விஸ் மூன்று வருடங்களுக்கு இந் நியமனத்தை வழங்கியுள்ளார்.

(ஐ-30)

# பொலீஸ் அதிகாரிகளின் பதவி உயர்வுகள் ரத்து

## ஜனாதிபதி நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 3

இன்ஸ்பெக்ரர் தரத்திலிருந்து உதவிப் பொலீஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ள 4 பேரின் பதவி உயர்வுகள் ஜனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

டபிள்யூ. ஜே. ஜெயக்கொடி ஆராய்ச்சி (வெள்ளவத்தை), சரத்விக்கிரமசிங்க (கட்டுகஸ்தோட்டை), சிசிர நாணயக்கார (சி. ஐ. டி.) பி. முனசிங்க (விசேட அதிரடிப்படை) ஆகிய நான்கு பேருக்கும் நேற்று முதல் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

தகுதி, திறமை, சேவை மூப்பு என்பன புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியிடம் முறைப்பாடுகள் செய்யப்பட்டதை அடுத்து பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி இவர்களது பதவி உயர்வுகளை ரத்துச் செய்வதற்கான பணிப்புரையை விடுத்தார்.

(இ-21)

# சிமெந்துத் தொழிற்சாலை 2 மாதங்களில் இயங்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை இருமாத காலத்தில் இயங்க ஆரம்பிக்கும் என ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் தொழிற்சாலையை மீள ஆரம்பிக்க ஜனாதிபதி உட்பட உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் —

இத் தொழிற்சாலையின் புனர்நிர்மாணம், தொழிலாளர்களின் பாதுகாப்பு உட்படப் பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

# குடிதண்ணீர் மற்றும் உணவு வழங்க செனகல் படையினர் மறுத்தனர்

## இலங்கை திரும்பியவர்கள் தகவல்

கொழும்பு, மார்ச் 3

இத்தாலி செல்வதற்காக ஆபிரிக்க நாடான செனகலில் இருந்து கடல் மார்க்கமாகச் சென்ற எம்மை செனகல் நாட்டின் கடற்படையினர் கடலில் வைத்து கைது செய்து அவர்களுடைய கப்பலில் தடுத்து வைத்திருந்தனர். தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 நாள்களும் உணவு, குடிதண்ணீர் இன்றி பெரும் அவதிப்பட்டோம்.

மேற்கண்டவாறு செனகலிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட தமிழர்கள் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்தனர்.

செனகலில் இருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்ட 192பேர் நீதிமன்ற உத்தரவுக்கிணங்க நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்ட தேவானந்தா அவர்களின் குறைகளைக் கேட்டறிந்ததுடன் இது குறித்து இரகசியப்பொலீஸாருடனும் சட்டமா அதிபருடனும் தொடர்புகொண்டார்.

இதே வேளை ஒரு வார காலத்தில் அவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை அவர்கள் மேற்கொள்வதாக அவர்கள் உறுதி அளித்துள்ளதாக டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் 50க்கும் மேற்பட்டவர்கள் சின்னம்மை நோயினால் பீடிக்கப்பட்டுள்ளமையினால் அவர்களுக்கு பழ வகைகள், உணவுகள் என்பனவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்காக 5000 ரூபாவை தேவானந்தா சிறைச்சாலை அத்தியட்சரிடம் வழங்கினார்.

இலங்கைக்குத் திரும்பிச் செல்வதற்கு சம்மதம் தெரிவித்தால் மட்டுமே உணவு, தண்ணீர் வழங்கப்படும் என செனகல் கடற்படையினர் தம்மை நிர்ப்பந்தித்ததாக தமது கடவுச்சீட்டு, விஸா என்பன சட்டபூர்வமானதாக இருந்த போதிலும் உணவு, குடிதண்ணீர் இன்மையால்தான் திரும்பி நாட்டுக்கு வர சம்மதித்ததாகவும் அவர்கள் தேவானந்தாவிடம் தெரிவித்தனர்.

திருப்பி அனுப்பப்பட்ட 192 பேரில் 15 பேர் சிங்களவர்களாவர்.

இதேவேளை உக்ரேயின் நாட்டிலிருந்து திருப்பியனுப்பப்பட்ட 47 பேர் மீரிகாமை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களையும் தேவானந்தா சென்று பார்வையிட்டதுடன் விடுதலைக்கான நடவடிக்கையினை மேற்கொள்வதாக உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-10)

# வாகரை செயலக ஊழியர் வேலைக்குச் செல்லமறுப்பு

மட்டக்களப்பு, மார்ச் 3

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலக ஊழியர்கள் வேலைக்குச் செல்ல மறுப்புத் தெரிவித்துள்ளதால் அலுவல்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இராணுவக்கட்டுப்பாடற்ற மேற்படி பிரதேசத்திலிருந்து தமக்கு இடமாற்றம் வழங்குமாறு அரசாங்க அதிபர் ஏ. கே. பத்மநாதனைச் சந்தித்து அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு என குற்றஞ்சுமத்தப்பட்டு சாரங்கபாணி அறிவழகன் என்ற எழுதுநர் ஒருவர் கிளர்ச்சித் தடுப்புப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்தே செயலக ஊழியர்கள் மத்தியில்பீதி ஏற்பட்டுள்ளது.

(ஐ-21)

# செஞ்சிலுவை கிளைகளுக்கு அம்புலன்ஸ் வாகனங்கள்

வவுனியா, மார்ச் 3

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்க கிளைகளுக்கு தலா ஒவ்வொரு அம்புலன்ஸ் வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச்சங்க ஆளுநர் சபைக் கூட்டம் ஞாயிறன்று கொழும்பில் நடந்த சமயம் இந்த வாகனங்கள் வடமாகாண ஒருங்கிணைப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்துக்கான அம்புலன்ஸ் வாகனம் கப்பல் மூலம் எடுத்து வர ஏற்பாடாகியுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு ''பிக்கப்'' வாகனம் ஒன்று வழங்கப்படவிருக்கின்றது.

(இ-164-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

20/3, புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் ராதிகா என்பவரது பாடசாலை அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, இராணுவ பாஸ் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பாசையூர் புனித அந்தோனியார் மகளிர் பாடசாலையில் ஒப்படைக்கவும். (53758)

## விற்பனைக்கு

கைதடி நாவற்குழியில் மறவன்புலோ பகுதியில் 15 பரப்பு நெல் வயலும், 3 பரப்பு மேட்டு நிலமும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- த. யோகராசா, சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (53760)

## தெளிவாகப் பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளை தெளிவாகப் பார்ப்பதற்கு புதிய அன்ரனாக்களை பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களை திருத்தி பொருத்துவதற்கும் பூஸ்ரர்களை பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் (B. Sc) (Ceylon) Dip in Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [53772]

## திருத்த வேண்டுமா

ரி.வி, றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும், ரி.வி அன்ரனாக்கள் பொருத்திக் கொள்ளவும் நாடுங்கள்: வீனஸ்தனபாலசிங்கம்((B.Sc.) (Ceylon) Dip in Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக,)யாழ்ப்பாணம். (53773)

## பாராட்டு விழா

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவர் சீ. வீ. கே சிவஞானம் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதைப்பாராட்டும்விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் மண்டபத்தில் நடைபெறும்.

சங்கத்தின் பணிப்பாளர்கள், பணியாளர்கள் மற்றும் சங்கத்தின் நலன்புரிச் சங்கம், தொழிற்சங்கம் ஆகியன ஒன்றிணைந்து இந்த விழாவை ஏற்பாடு செய்துள்ளன. (ஐ–17)

## வைக்கோல் தேக்கம்

சுழிபுரம் பகுதியில் ஒரு பரப்பு வைக்கோல் நூறு ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. வேண்டியளவு வைக்கோல் விற்பனைக்கு உள்ளது. கால்நடைகள் அதிகம் இல்லாததால் வைக்கோல் விற்பனை மந்த நிலைமையில் உள்ளது.

வைக்கோல் விலை குறைவாகவும் வண்டில் ஏற்றுக் கூலிகள் அதிகமாகவும் இருப்பதால் வயல்களில் வைக்கோல் தேங்கியுள்ளது.

## பொலீஸ் அதிகாரி இடமாற்றம்

வவுனியா, மார்ச் 3

வவுனியாவில் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகராகப் பணியாற்றிய காமினி டி.சில்வா சிலாபம் பொலீஸ் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பொலீஸ் பொறியியல் பிரிவில் பணியாற்றிய மைக்கல் ஆட்டிக்கல இவரது இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ–164–3)


# குடைச் சுவாமிகள்
(கந்தையாச் சுவாமிகள்)

## 20ஆம் ஆண்டு குருபூசை

மேற்படி குருபூசை கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்தில் மாசி 20ஆம் நாள் (4-3-98) புதன்கிழமையன்று நடைபெறும். அன்று விஷேட அபிஷேகமும் பகல் 12.30க்கு அன்னதானமும் நடைபெறும். அடியார்கள் இதில் பங்கு பற்றி அவரின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

உபயகாரர்:
கோண்டாவில் கிழக்குச் சந்தி
கடை உரிமையாளர்.

(53763)

# SIYANA'S

மீண்டும் யாழ். நகரில்!

★ அலுமினிய பைப்புகள் (பார்) ★ சோக்கேஸ், ★ கடை பிற்றிங்குகள் செய்வதற்குரிய அலுமினிய பீடிங்குகள் ★ கண்ணாடிகள் ★ ரிவேட், ★ பிளைவூட் ★ அன்ரனா பைப்புகள் ★ போமிக்கா சீட் மற்றும் ★ எலெக்ரிக் ரில் மெசின்

மேலும் இது சம்பந்தமான சகல விதமான பொருள்களுக்கும் நீங்கள் நாடவேண்டிய இடம்:

## சியானாஸ்

இல. 77, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(கல்யாணி கிறீம் ஹவுஸ் அருகில்) (53656)

# பாவனையாளரின் கவனத்துக்கு!

தற்பொழுது கம்பனி விலையில் எல்லாவகையான சிகரெட்டுகளும் எல்லா விற்பனையாளரிடமும் பாவனையாளர் பெறலாம்.

| விலைப் பட்டியல் | | பக்கட் | தனி சிகரெட் |
|---|---|---|---|
| Bristol | 20s | 80/- | 4/- |
| Gold Leaf | 12s | 54/- | 4/50 |
| Gold Leaf – Light | 20s | 90/- | 4/50 |
| Gold Leaf | 20s | 90/- | 4/50 |
| Benson and Hedges | 20s | 105/- | 5/25 |

Distributors for:
Ceylon Tobacco Co. Ltd.

## MURUGAN STORES

388, Hospital Street,
Jaffna.

(53766)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

முத்தாக: 25 — 03 — 1978



வித்தாக: 24 — 02 — 1996

## கந்தையா இராஜேஸ்வரன்

(ராசன்)

(புத்தூர், சோமாஸ்கந்த கல்லூரி மாணவன்)

திதி: 03 — 03 — 1998

இன்பமே இனியென்று
இறுமாப்பாய் நாமிருந்தோம்
துன்பம் சிறிதுமின்றி
துடுக்காக நீயிருந்தாய்
வந்ததே அன்று- கிபிர்
வாடினாயே நம்மை விட்டு.

உம்முடன் துணைவந்த சித்தப்பாவிற்கும் எமது நினைவுப் பூக்கள் மலரட்டும்.

குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

சிறுப்பிட்டி மேற்கு,
சிறுப்பிட்டி. (53744)


# வைத்தியசாலை

ஆங்கில, ஆயுர்வேத மற்றும் சீன அக்கு பஞ்சர் சிகிச்சை சிறப்பாக வழங்கப்படும். சகல நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். மேலும் மூட்டுவாதம், பாரிசவாதம், இளம்பிள்ளைவாதம் ஆகியவற்றுக்கு சிறப்புச் சிகிச்சையும், இளநரை, மயிர் உதிர்தல், பொடுகு ஆகியவற்றுக்கு கூந்தல் தைலமும் வழங்கப்படும்.

Dr. க. குலேந்திரன்,
அலுக்கை,
அளவெட்டி. 49977)


# ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணிற்கு வரவு;
01—03—1927

விண்ணிற்கு விரைவு:
12—02—1997



அமரர்

## கந்தையா முத்துலட்சுமி

திதி: 03 — 03 — 1998

ஓராண்டு சென்றும் அம்மா உங்கள் பிரிவுத்துயர்
ஆறவில்லை — எனினும்
நூறாண்டு சென்றாலும் உங்கள் பாசம்
நிறை அன்பை மறவோம் மறவோம்
உங்கள் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

கணவன், பிள்ளைகள்,
உடன் பிறப்புக்கள்.

108/1, கச்சேரி – நல்லூர் வீதி,
நல்லூர். (53771)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் பொன்னுத்துரை துரைரத்தினம்
பிரபல கார் புரோக்கர் (துரை)

மலர்வு: 07 - 04 - 1944
உதிர்வு: 03 - 03 - 1997

திதி: 20 - 02 - 98

பாசமுடன் எமை வளர்த்து, பாரிய கஷ்ட மனைத்தையும் நீக்கி வைத்து, எம்மை எல்லாம் வளர்த்து ஆளாக்கிய அண்ணாவே! வாழும் நாள் முழுவதும் வாடி நாம் நிற்கும் வேளை ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகளேயானாலும் ஒரு நாளாவது உங்கள் நினைவை நாம் மறவோம்.

உங்கள் பிரிவால் நினைந்துருகும்:

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
மருமக்கள், பெறாமக்கள்.

தகவல்;
பொ. பாலசிங்கம் (பாலா)
(சகோதரர்)
இலங்கை, வங்கி மானிப்பாய்.

''லக்சுமி வில்லா'',
வல்லை வீதி,
சங்கானை. (53769)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## 'ரியூட்டரி'க் கலாசாரம்

தனியார் கல்வி நிறுவனங்கள் மீது கட்டுப்பாடுகள் விதிப்பது குறித்து அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகச் செய்திகள் வந்துள்ளன.

''ரியூட்டரி''கள் எனப்படும் தனியார்கல்வி நிலையங்கள், பாடசாலைகளை விட எண்ணிக்கையில் அதிகமாக இயங்கிய போதிலும் கல்விப் பகுதியில் பதிவு செய்யப்படுவதில்லை. அமைப்பு விதி, ஒழுங்கு விதி என்று எதுவுமே இல்லாமல், காளான் முளைத்தது போலப் பெருகி உள்ளன.

பாடசாலைகளுக்கு சமுகம் அளிக்காவிட்டாலும் பரவாயில்லை; ரியூட்டரிக்குச் செல்வதை எக்காரணம் கொண்டும் தவிர்க்க முடியாது என்று மாணவர்கள் கூறுமளவுக்கு இன்றைய கல்விப் போதனையில் அவை ''முக்கிய'' இடத்தைப் பிடித்திருக்கின்றன; ஆதிக்கம் செலுத்துகின்றன.

பாடசாலைகளில் உரிய முறையில் கல்வி போதிக்காத ஆசிரியர்கள், மேலதிக வருமானத்துக்காக ''ரியூட்டரி'' களில் வகுப்புகள் எடுக்கிறார்கள். ஆனால் அங்காவது அக்கறையுடன் போதிக்கிறார்களா என்றால், அதுவும் இல்லை. ''நோட்ஸ்'' ''ரியூட்ஸ்'' என்று பெரிதாகக் காட்டி மாணவர்களை ஏகளைக்கச்செய்வதே அவர்களின் சாதனை.

போதிக்கப்படும் பாடங்களுக்கு மிகக் கூடிய கட்டணங்கள் அறவிடப்படுவதாகவும், வகுப்புகளில் பாடசாலைகளை விடப் பல மடங்கு மாணவர்கள்சேர்க்கப்படுவதாகவும் பெற்றோர் முறைப்படுகிறார்கள். இதுபோதாக்குறைக்கு மாணவர்களின் ஒழுக்கத்தைக் கெடுக்கும் ''ரியூட்டரிக் கலாசாரம்'' ஒன்றும் புதிதாக முளைத்து வருகிறது.

மாணவர்கள் காலை தொடக்கம் இரவு வரை பாடசாலையும், ரியூட்டரியும் என்று ஓடி ஓடிப் படிப்பதால் அவர்களது இயற்கையான திறமையும் மழுங்கடிக்கப்படுகிறது.

இத்தகைய பல தாக்கங்கள் இருப்பினும் ''ரியூட்டரி''யில் படிப்பது ஒரு நாகரிகமாகி விட்டதால் பெற்றோர்களாலும் தமது பிள்ளைகள் அங்கு செல்வதைத் தடுக்க முடியவில்லை. ''ரியூட்டரி''க்குச் சென்று படிப்பதால்தான் பரீட்சையில் சிறப்பாகச் சித்தி அடைய முடியும் என்ற ''மாயை'' ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தகுதியான ஆசிரியர்களைக் கொண்டு, மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையுள்ள மாணவருக்கு, அக்கறையுடன் கல்வி போதிக்கும் தனியார்கல்வி நிலையங்கள் மாணவருக்குப் பயனுள்ளவையாக அமையக் கூடும்.

ஆனாலும் அவை அரசினால் கண்காணிக்கப்படுவது அவசியம். பணம் சம்பாதிக்கும் வியாபார நிலையங்களாக இயங்க அவற்றை அனுமதிக்கக் கூடாது.

மூன்று தசாப்தங்களுக்கு முந்திய நிலைக்கு மீளும் வகையில் பாடசாலைக் கல்விப் போதனை சீராக்கப்பட்டால், அர்ப்பணிப்புள்ள திறமையுள்ள ஆசிரியர்கள் உருவாக்கப்பட்டால் ''ரியூட்டரிக் கலாசாரம்'' மேலோங்கமாட்டாது.

# பொருளாதார அதிகாரப் பகிர்வு ஜனநாயக வழி அமைய வேண்டும்

## தனியார் மயமாக்கல் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த உதவுமா?

இலங்கையின் இன்றைய பொருளாதார யதார்த்த நிலைமைகள் அரசியல் முன்னுரிமைகள் அடிப்படையில் பல தாக்கங்களை அடைந்துள்ளன. அத்துடன் அரசாங்க வர்த்தக, தொழில் நிறுவனங்கள் பெரு நட்டத்திலும் இயங்குகின்றன. இந்த நிலையில் அரசாங்கம் தொடர்ந்து தனியார் மயமாக்கலின் மூலமாகப் பல நன்மைகளைப் பெற முனைகின்றது. இதற்கு ''அரசாங்க தொழில் முயற்சிகள் சீராக்கல் ஆணைக்குழு'' பல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

தொழில்நுட்பத்துறை வளர்ச்சிகள் பொருளாதாரத்திலும், சமூகத்திலும் பெரு மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. இன்றைய இலங்கையில் புதிய தொழில் நுட்ப வளர்ச்சியின் நேரடி அம்சங்கள் எலக்றோனிக் டெல்லர் மெஷின், பே—போன் ஆகியவையாகும். எலக்றோனிக் டெல்லர் மெஷின் வங்கித் தொழிலை வங்கிக்கு வெளியிலும் வியாபிக்கச் செய்துள்ளது. அதே போன்று பே—போன் தனிநபர்களுக்கிடையிலான தொடர்பில் பெருமாற்றத்தைக் கொண்டு வந்துள்ளது. இவை இரண்டுமே தனியார் துறை முயற்சிகளாகும். இவ்வாறே பல சேவைகளை விரைவாக வழங்க தனியார் துறை முனைந்து செயற்படுகிறது. இவை லாப நோக்குடன் மட்டுமல்லாது சேவைகளின் பயன்பாட்டையும் உணர்த்துகிறது.

எனினும் அரசாங்கத் தொழில் முயற்சிகள் நீண்டகாலமாக சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் முக்கிய பங்கினை ஆற்றி வந்துள்ளன. பல வழிகளிலும் சிறந்த சேவைகளைப் புரிந்துள்ளன. அவற்றைத் தனியார் மயமாக்குவது உண்மையிலேயே அவசியம் தானா? என நோக்கவேண்டியுள்ளது. இந்நிலையில் உண்மையிலேயே இந்நிறுவனங்கள் செயற்றிறன் குறைந்தவையாக நட்டத்தில் இயங்கி வருகின்றன. இவற்றை இயக்க அரசாங்கத் திறைசேரியிலிருந்து பெருமளவு பணத்தை வாரி வழங்க வேண்டியுள்ளது. சில தொழில் முயற்சிகள் லாபம் ஈட்டுவதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். இவற்றிலும் பல நிர்வாக, அரசியல் செல்வாக்குகள், ஊழல் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இவற்றைத் தீர்ப்பதும் திறமையற்ற அரசாங்கத் தொழில் முயற்சிகளைச் சீரமைப்பதும், ஒழுங்கமைப்பதுமே தனியார் மயத்தின் உண்மையான நோக்கமாகும்.

### தொழில் பாதுகாப்பு

அரசாங்க நிறுவனங்களை விற்கும் போது அவற்றை வாங்கும் முதலீட்டாளர்கள் சகல அரசாங்க விதிப்படி நடந்து கொள்வதாக உறுதியளிக்க வேண்டும். இதற்கேற்ப அரசாங்க தொழில் முயற்சிகள் சீராக்கல் ஆணைக்குழு தொழிலாளர் சாசனத்தின் கோட்பாடுகளை மதித்து நடப்பது பற்றி அவர்களுக்குத் தெளிவுபடுத்தும் ஊழியர் உரிமைகளைப் பாதுகாப்பது இந்த முதலீட்டாளர்களின் முன்னோடித் தன்மைகளில் ஒன்றாக இருக்கும். இத்தனியார் மயமாக்கலை சரியான முன் யோசனைகளுடன் அரசாங்க தொழில் முயற்சிகள் சீராக்கல் ஆணைக்குழு செய்கின்றது. இச் செயற்பாட்டில் ஒளிவு மறைவு அற்ற நிலைப்பாடு முக்கியமாகும்.

அரச சொத்துக்கள் உண்மையான சந்தை நிலைமைகளில் பெறுமதி மதிப்பிடப்படல், தெளிவான கேள்விப்பத்திர முறையில் மதிப்பீடு செய்யப்படும் விற்பனையுடன் மாத்திரம் ஆணைக்குழுவின் கடமை முடிந்துவிடாது. ஒவ்வொரு தனியார் மயமாக்கல் நடவடிக்கையின் போதும் உன்னிப்பாக ஆராய்ந்து தொடர்ந்து கண்காணிப்புச் செய்யும். விற்பனை நிபந்தனைகள் யாவும் கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்று நிறுவனத்தின் செயற்பாட்டை அவதானிக்கும். உதாரணமாக நிறுவனத்தின் புதிய முகாமைத்துவம் தொழிலாளர் எவரையும் வேலைநீக்கம் செய்வதில்லை என உடன்பட்டிருந்தும் அதை அவர்கள் கடைப்பிடிக்கத் தவறினால் அதற்கான நேரடி நடவடிக்கையில் ஆணைக்குழு இறங்கும்.

இன்றைய உலகப் பொருளாதார யதார்த்த தன்மைகளை இலங்கையும் அனுசரிப்பது அவசியம். தேசிய ஒருமைப்பாடு போன்றதுறைகளின் குறுகிய நோக்கத்துடனான கொள்கை காரணமாக பின் நிற்க வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளன. நேரம், வாய்ப்பு, உயிர் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் இலங்கை எண்ணற்ற இழப்புக்களை அடைந்துள்ளது. யுத்தச் சூழலும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

பொருளாதார மந்த நிலையில் இருந்து விடப்பட வேண்டுமென்ற கோரிக்கையை புரட்சியில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் உறுதியாகத் தெரிவித்துள்ளார்கள். வாக்களிப்பு என்ற இரகசிய முறையை இந்த விடயத்தில் அவர்கள் ஒதுக்கி விட்டார்கள். புதிய சந்ததியின் தேவைகளான பொருளாதார விஸ்தரிப்பு, கூடுதலான வேலைவாய்ப்பு, திறமையில் உண்மையான அங்கீகாரம், முன்னேற்றம் ஆகியவையே ஆதம்.

இவை அனைத்தையும் அரசாங்கத் துறையினால் தீர்க்க முடியாது. எதிர்கால அறைகூவல்களை ஓரளவேனும் தீர்க்க தனியார் துறை வளர்ச்சியடைவது அவசியமாகும். மூலதனம், தொழில்நுட்பம், நிபுணத்துவம் ஆகியவற்றின் பற்றாக்

பா. தனபாலன்(பி.ஏ.)

குறையினால், நலிவுற்றிருக்கும் அரசாங்க நிறுவனங்களுக்கு தனியார் மயமாக்கல் நல்ல வளர்ச்சிகளை ஏற்படுத்தலாம். மேலும் புதிய தொழிற்றுறைகளை அபிவிருத்தியும் செய்யும்.

### பொருளாதார மந்தம்

பல்வேறு தாக்கங்களினால் அரசாங்கத்தின் பணப் பிரயோகத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இது பொருளாதார மந்த நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. சமூகத்தின் ஏனைய அம்சங்களைப் போலவே அரசாங்கம் அதன் பணப் பிரயோகத்தை வெளிப்படுத்தல், உள்வாங்குதல் போன்ற செயல்களுக்கு நிதியளிக்க ஏதாவது ஒருவழியைக் காண வேண்டும். ஒரு அரச வழிமுறை இழப்பை ஏற்படுத்துமானால் மற்றொரு அரச வழிமுறை ஈடுசெய்யும் வகையிலான மிகை வருமானத்தைத் தோற்றுவிக்க வேண்டும்.

பல முன்னைய மாதிரிகளைப் போன்று பணத்தை நுகரும் பெருந்தொகையான முயற்சிகள் இருக்குமானால் அரசாங்கத்தின் மீதி அம்சமான தேசிய பொருளாதாரத்தில் தவிர்க்க முடியாத விரயமே ஏற்படும். இலங்கை தொடர்பான துரதிர்ஷ்டவசமான, கவலைக்கிடமான உண்மை இதுவாகும்.

ஒரு தடவை பிரபலமான தீர்வாக இருந்த பணம் அச்சிடுதல் இப்பொழுது பணவீக்கத்திற்கான தவிர்க்க முடியாதவழி எனக் கருதப்படுகின்றது. இதனால் வேலையில்லாப் பிரச்சினையும் பொருளாதார வீழ்ச்சியும் ஏற்படுகின்றன. அனேகமாக பண மானியத்தைக் கோரும் அரச நிறுவனங்களே பெரும்பாலானவையாக உள்ளன. இப்பண மானியத்தில் தங்கியிருக்கும் அரச தொழில் முயற்சிப் பிரச்சினைகளுக்கு ஒரே வழி இயன்ற அளவு வெளிப்படையாகக் கையாள வேண்டிய தனியார் மயமாக்கலே ஆகும். இதுபொது மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் படிப்படியாகக் கையாளப்பட வேண்டும். புதிய முதலீட்டாளர்களுக்குத் தேவையான நம்பிக்கையையும் ஊக்குவிப்பையும் இது வழங்குகின்றது.

பேரளவான பொருளாதார அதிகாரம் அரசாங்கம் ஒன்றின் கைகளில் குவிந்திருப்பதற்குப் பதிலாக பொருளாதார சக்தி ஜனநாயக ரீதியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள சமூகம் ஒன்றை விரும்புபவர்களுக்குத் தனியார் மயமாக்கல் சிறந்ததேயாகும்.

### திறமையான முகாமைத்துவம்

இன்று உலகளாவிய ரீதியில் முகாமைத்துவ செயற்பாடுகள் திறமையாக, விரைவாக இயங்கும் முறைகள் தனியார் துறையினரிடமே உள்ளன. இன்றைய புதிய முகாமை விஞ்ஞானமானது பல சர்வதேசக் கூறுகளையும், ஸ்தலக் கூறுகளையும் உள்ளடக்கியதாக வளர்ந்துள்ளது. இம் முகாமைக் கூறுகள் பொருளாதாரக் கலாசாரத்துடனும் பின்னிப் பிணைந்து இன்றைய உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகங்களில் பெரும் செல்வாக்குகளைப் பெற்றுள்ளது. இதற்கேற்ப எமது நிலைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

இவ்வகையிலே தனியார் மயமாக்கல் மிக அவசியமாகத் தென்படுகின்றது. ஆனாலும் இத்தனியார் மயமாக்கல் ஓர் இறுதி நோக்கம் அல்ல. உண்மையில் வாழ்க்கை நிலையை மேம்படுத்தி, தொழில்நுட்ப முகாமைத்துவ ரீதியில் முன்னேற்றம் கண்டு தொழில் வாய்ப்புக்களை அதிகரித்து சமுதாயத்தைச் சுபீட்சமான எதிர்காலத்திற்குக் கொண்டு செல்வதற்கான ஒரு வழியாகவே அதனைக் கொள்ள வேண்டும். அதற்கேற்றவாறு அதன் கட்டமைப்பு உருவாக்கப்படுவது அவசியம். ★

## தவக்காலச் சிந்தனை

[7ஆம் நாள்]

மன்னிக்க முடியாமை தான் இன்று மனுக்குலம் மரணத்தீர்வைஇடுவதற்கு காரணமாக அமைகின்றது. அதிகப்பிரசங்கித்தனம் செய்வோர்தான் அதிகமானோராக இருக்கின்றோம்.

கிணற்றிலே வீழ்ந்தவனைக் காப்பாற்றிவிடாது விமர்சனம் செய்கின்றோம். அயலவனை மன்னிக்கத்தெரியாத நாம் ஆலயத்தில் சென்று மிததியான சொற்களைக் கொண்டு பேசுவதால் பிதற்றுகிறோம். ஆண்டவன் விரும்புவது இவற்றையல்ல.

''மற்ற மனிதர்செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத்தந்தையும் உங்களை மன்னிப்பார்'' (மத். 6:14) இறைவனின் திருவுளத்தை மண்ணகத்திலும் விரும்புவோர் மன்னிக்க முன் வருவர்) மன்னிப்பும் பெறுவர். தவக்காலம் மன்னிக்க, மறக்க, உறவுகளை ஏற்படுத்த நம்மைத் தூண்டுங்காலம். மன்னிப்பைக் கொடுத்துப் பாருங்கள் மனநிறைவை, மனமகிழ்வைக் காண்பீர்கள். இறைஉறவும் எம்மை வழிநடத்தும்.

- அபிர்

## உதய வாக்கு

எனக்கு கோபம் உண்டாகாமலில்லை. ஆனால் கோபத்தை அடக்கிக் கொள்கிறேன்.

இடைவிடாமல் முயன்றால் எல்லோருக்கும் இது சாத்தியமாகும்.

—மகாத்மா காந்தி

## தட்டிவான் சேவை நிறுத்தம்

செம்பியன்பற்று, மார்ச் 3

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கென பருத்தித்துறையில் இருந்து நாகர்கோயில் வரை நடத்தப்பட்டு வந்த தட்டிவான்சேவை கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக நிறுத்தப்பட்டுள்ளது.

(இ-36)

## நாளை

மாசி 20

புதன்கிழமை

திதி: ஷஷ்டி

முற்பகல் 10.30 வரை

நட்சத்திரம்: கார்த்திகை

பின்இரவு: 12.52 வரை.

கார்த்திகை விரதம்

சுபநேரம்: 4.57 – 6.27

ராகு காலம்: 12.27 – 1.57

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி உதவிகளை நேரில் வழங்கும் கோரிக்கைக்கு அரச தரப்பு எதிர்ப்பு

கொழும்பு, மார்ச் 3

வடபகுதி அபிவிருத்திக்காக வழங்கப்படும் நிதி உதவிகள் அரசாங்கத்தினூடாக வழங்கப்படாமல் நேரடியாக தமக்கு வழங்கப்பட வேண்டும் என தமிழ்க் கட்சிகள் அமெரிக்காவிடம் விடுத்துள்ள கோரிக்கைக்கு அரசாங்கத்தின் சில தரப்பினர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர் என கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ஈ.பி.டி.பி. ஆகிய தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஞானம்ஹோட்டலில் அமெரிக்காவின் அரசியற் பிரிவின் தொடர்புச் செயலாளர் அன்ட்றூமானைச் சந்தித்த போது இந்த நிதி உதவிபற்றிய வேண்டுகோளை விடுத்திருந்தனர்.

அவர்களது கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படும் என அன்ட்றூ மான் அப்போது தெரிவித்திருந்தார்.

வீதி அபிவிருத்தி, மின் விநியோகம் மற்றும் நீர் விநியோகம் தொடர்பாக உதவி வழங்குமாறு கூட்டணியும் வடிகால் அமைப்புத் தொடர்பான உதவிகளை வழங்குமாறு ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பும் மீன்பிடி அபிவிருத்தி தொடர்பான உதவிகளை வழங்குமாறு ஈ.பி.டி.பி. அமைப்பும் அன்ட்றூமானிடம் கோரியிருந்தன.

இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டதைக் கேள்வியுற்ற அரசாங்கத் தரப்பு மூத்த அரசியல் வாதிகள் கோரப்பட்ட நிதி உதவி குறித்து நீண்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டனர்.

அரசாங்கத்தின் ஊடாகவே எந்தவொரு நாடும் நிதி உதவி வழங்க வேண்டும் என்றும் —

அதைவிடுத்து அரசியல் கட்சிகளுக்கு நேரடியாக நிதியுதவியை வழங்குவது பொருத்தமற்றதும் இடமளிக்க முடியாததும் எனவும் — அரசாங்கத்தரப்பு அரசியல்வாதிகள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு நிதி உதவிகளை அரசியல் கட்சிகளுக்கு நேரடியாக வழங்க இடமளித்தால் அரசியல் தீர்வு குறித்து மக்களுக்கு நம்பிக்கையை உருவாக்குவது கடினம் என்பதும் அரசாங்கத் தரப்பு அரசியல்வாதிகளின் கருத்தாகும் என்று லங்காதீப சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(இ-10)

## அரச ஊழியர்களின் மதிய உணவு நேரம்

### கண்டிப்பாக அமுலாகும்

யாழ்ப்பாணம் மார்ச். 3

அரச ஊழியர்களுக்கு மதிய போசன இடைவேளைக்கு வழங்கப்பட்டுள்ள 30 நிமிட நேரத்தைக் கண்டிப்பாக அமுல் செய்யுமாறு பொது நிர்வாக அமைச்சு சகல திணைக்களத் தலைவர்களையும் கேட்டுள்ளது.

அரச ஊழியர்கள் மதியபோசனம் எடுப்பதற்கு அரைமணி நேர இடைவேளை வழங்கும் திட்டம் நீண்டகாலமாக அமுலில் உள்ளது.

இந்த வசதியை பல ஊழியர்கள் துஷ்பிரயோகம் செய்வதாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து இந்த வசதியை கண்டிப்பாக அமுல் செய்யுமாறும்—

அதன்படி நடக்காத ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் படியும்— பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது.

(இ-3)

## மேற்கு நாட்டுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்து ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ள வேண்டிய அவசரப் பணிகள் குறித்து மேற்கு நாட்டுப் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்துக்கு வந்து நேரடியாக ஆராய்ந்து வருகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் அலுவலகத்தை கொண்டியங்கும் ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் யாழ். செயலக அதிகாரிகளுடன் இணைந்து பல திட்டங்களை இனங்கண்டுள்ளது.

இத்திட்டங்களை ஆரம்பிக்க அந்த அமைப்பு அமெரிக்கா, ஜேர்மன், ஆஸ்திரேலியா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் நிதிஉதவி கேட்டுள்ளதாகவும் —

அந்த நாடுகள் தாம் உதவி வழங்க விரும்பும் திட்டங்கள் குறித்து ஆராய யாழ்ப்பாணத்துக்கு நேரடியாக விஜயம் மேற்கொள்வதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் பாரிய திட்டங்களை மேற்கொள்ள விரும்புவதாக அந்த நாடுகளின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் சந்தித்த பிரதிநிதிகளிடம் தெரிவித்ததாகவும் —

சிறுசிறு திட்டங்களை மேற்கொள்ள உடனடியாக உதவிகள் வழங்க ஏற்பாடு செய்வதாக அவர்கள் தெரிவித்ததாகவும் — கூறப்பட்டது.

(இ-3)

## வீடுகளைச் சீரமைக்க 'ஜி.ரி.சற்' திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3

கடந்த காலங்களில் இடம்பெற்ற வன்செயல்களால் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்க ஜி. ரி. சற்' என்னும் ஜேர்மன் தொழிற்நுட்பக் கூட்டுத்தாபனம் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த விருக்கின்றது.

இந்த அமைப்பின் உயர் அதிகாரிகளும், ஜேர்மன் பொருளாதார நடவடிக்கைகளுக்கான அமைச்சு அதிகாரிகளும் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்த சமயம் இது தொடர்பான கோரிக்கைகளை யாழ். செயலக அதிகாரிகள் முன் வைத்தனர்.

இது தொடர்பாக ஆராய்ந்து இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்வதாக அவர்கள் தெரிவித்தனர்.

அதே நேரம்-ஜேர்மன் அரசாங்கம் கே. எவ். டபிள்யூ. திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள மானியத்தில் வீடுகள் புனரமைப்பு, பாடசாலை சுகாதார வசதிகள், நாவற்குழி பண்டசாலை புனரமைப்பு ஆகியன செய்யப்படவிருப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

(இ-3)

# தென்னைத் தண்டு கசிவு நோயும் அதனை கட்டுப்படுத்தும் முறையும்

ஜெ. சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்
தென்னை பயிர்ச் செய்கை சபை

யாழ். குடா நாட்டில் பல இடங்களில் பரவலாக தென்னைத் தண்டு கசிவு நோய் ஏற்பட்டுள்ளது.

இந்த நோய் பல்வேறு காரணங்களினால் ஏற்படலாம். அவையாவன:-

மின்னல், பெருமழை, அல்லது வெள்ளம், தீயினால் ஏற்படும் சேதம், செவ்வண்டுத் தாக்கம், மேலதிக உரமிடுதல் போன்றவை.

பொதுவாக இத் தண்டுக் கசிவு நோயின் ஆரம்ப நிலையாக மரப்பட்டையில் வெடிப்பு ஏற்படும். ''செரற்ரோசிஸ்ரிஸ் பரடொக்கா'' (Ceratocystis Pardoaxa) என்ற பங்கஸ் பலவீனமடைந்த இழையங்களை ஊடுருவுகின்றது. இப்பங்கஸின் தாக்கம் கசிவை அதிகரிக்கச் செய்கின்றது. முக்கியமாக கடற்கரை ஓரத்திலுள்ள தாழ்நிலங்களை அண்டிய நீர்தேங்கி நிற்கக் கூடிய இடங்களிலுள்ள தென்னைகளில் இதனை அவதானிக்கலாம்.

### அறிகுறிகள்

தென்னை மரத்தின் அடிப்பகுதியிலும் சரி, அல்லாவிடில் தண்டின் ஏனைய பகுதிகளிலும் சரி, மரப்பட்டையில் நீளப்பாடான வெடிப்புக்கள் உண்டாகி, செங்கபில நிற அல்லது துருநிறமான தண்ணீர்த்தன்மையான திரவம் கசிவது இந் நோயின் ஆரம்ப அறிகுறி ஆகும்.

சுமார் 6'' — 9'' வரை நீளமாக வெடித்து அதனூடாக கசியும்.

படிப்படியாக இப்பகுதிகள் கருமையாகி முடிவில் நரை கலந்த கறுப்பு நிறமாக மாறுகின்றது. நோய் உண்டான பல பகுதிகள் சேர்ந்து பெரிய பகுதிகள் உண்டாகும்.

நாளடைவில் நாம் கவனிக்காதுவிடின் இப்பகுதியிலிருந்து திரவத்தன்மையான கசிவு நின்று கூழ் போல் தடித்து, பிசின் போல் தென்படும். மேலும் அப்பகுதிகள் கீறுகளாகக் கட்டிபடும். தொற்றல் ஏற்பட்ட பகுதியை ஒரு கூரிய உளி அல்லது கத்தியினால் மேலாக வெட்டி எடுத்தால் கீழ் உள்ள நார்த்தன்மையான இழையம் கறுப்பு நிறமாகவும், உக்கி இருப்பதனையும் அவதானிக்கலாம். மரத்தின் அடிப்பகுதியில் காணப்படும் அடைப்புக்குறி போன்ற பங்கஸ் இந் நோயின் பிரத்தியேக அறிகுறிகளாகும்.

சில வேளைகளில் வீரியமான உருண்டையான பருத்த அடி கொண்ட இளம் மரங்களிலுள்ள மேற்பட்டையில் சில வெடிப்புக்களைக் கொண்டிருத்தல் அசாதாரணமானதல்ல.

தீயினால், உதாரணமாக, குப்பைகளைக் கூட்டி தென்னை மரத்திற்கு கீழ் எரித்தல், மின்னல் தாக்கிய மரம், செவ்வண்டுத் தாக்கம் ஏற்படுத்திய மரம் இலகுவில் அடையாளம் கண்டு கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

இந்நோயின் அறிகுறிகளான கசிவினையும், தண்டுக் கசிவினால் பாதிக்கப்பட்ட மரத்தில் செவ்வண்டுத் தாக்கம் உள்ளதா என்பதனையும் அவதானித்தல் வேண்டும். (உதாரணமாக வண்டு வெளிவரும் துவாரம், அரிக்கப்பட்ட துமபு போன்ற அமைப்பு, வண்டு அரிக்கும் சத்தம், குருத்து வாடல் — செவ்வண்டுத் தாக்க அறிகுறிகள்)

அதிகளவு உரப்பிரயோகமும் நீரினது சடுதியான உறிஞ்சலும் மரப்பட்டையில் வெடிப்பினை ஏற்படுத்தி பங்கஸ் உட்செல்ல வழி வகுக்கின்றது. பொதுவாக இளம் வயதுடைய தென்னைகளே இதனால் பாதிப்படைகின்றன.

### கட்டுப்படுத்தும் முறை

இது ஒரு பங்கஸ் நோய் ஆகும். மற்றைய நோய்களைப் போல் இங்கும் நோயை ஆரம்பத்தில் கண்டு பிடித்தால், இலகுவில் குணமாக்கலாம். பிசின் வடியும் பகுதியை அல்லது கரிய நிறப் பரப்புக்களை கூரிய கத்தியினால் அல்லது கைக் கோடரியினால் செந்நிற இழையம் தெரியும்வரை மரத்தின் பட்டைப் பகுதியை வெட்டி எடுத்து ஓரிடத்தில் போட்டு உடனடியாக எரித்தல் வேண்டும். உக்கிய கரித்தன்மையான நார்இழையம் முற்றாக அகற்றப்படல் வேண்டும்

தொற்றல் ஏற்பட்ட பரப்புக்களை நன்றாகத் துப்புரவு செய்த பின்பு, தண்டின் தொற்றல் ஏற்பட்ட பகுதிக்கு மேற்புறமாக 2'' அளவு அகலத்தில் மேற்பட்டையை மட்டும்சுற்றிவர சீவி எடுத்து விட வேண்டும். பின்பு, ''போடோ கலவை'' (Bordeaux Mixture) எனப்படும் பங்கஸ் நாசனியை தயார் [illegible] கும் (பட்டை வெட்டிய பகுதி உட்பட) தும்பின் உதவியுடன் பூசலாம். ஒரு வாரத்தின் பின்பு மீண்டும் அதே பகுதிக்கு போடோ கலவை பூசுதல் வேண்டும்.

10 நாள்களின்பின்பு வேறு தொற்றலோ அல்லது கசிவுகளோ இல்லாதவிடத்து காயங்கள் மேல் கரித்தார் அல்லது மெழுகு பூசிவிடவும்.

இத்தகைய நிகழ்வுகளில், சில தென்னைச் செய்கையாளர்கள் பட்டை வெட்டுவது ஏன் என்ற காரணம் தெரியாமல், எல்லாமரத்திற்கும் பட்டையை வெட்டுகின்றனர். இது முற்றிலும் தவறான செயன் முறையாகும்.

தண்டுக் கசிவு உள்ள மரத்திற்கு மட்டும் இந்த பரிகாரம் செய்தல் வேண்டும். கசிவு முற்றாக இல்லாமல் போனதை உறுதிப்படுத்த காயங்களைச் சில நாள்களின் பின்பு பரிசோதிக்க வேண்டும்.

கசிவு அதிகளவு ஏற்பட்டு பெரிய பரப்பளவு தாக்கப்பட்டால், தொற்றல் ஏற்பட்டுள்ள இழையங்களை இயலுமான அளவு அகற்ற வேண்டும். இப்படியான நேரத்தில், கறையான் அல்லது வண்டுகள் (பீடைகள்) தாக்கம் நடைபெற வாய்ப்புண்டு. உதாரணமாகக் கறையான்களைக்கட்டுப்படுத்த குளோரோடேன் பூச்சிநாசனியை தெளிப்பது அல்லது பூசுவது அவசியமானதாகும்.

தண்டுக் கசிவு நோய்க்கு பரிகாரம் காணமுன்பு, தண்டு கசிவிற்கான காரணத்தை ஆராய்ந்த பின்புதான், மேற்குறிப்பிட்ட செயன் முறைக்களைக் கையாள வேண்டும். பரிகாரம் நோய் நிகழும் சந்தர்ப்பத்தினைப் பொறுத்து உள்ளது. உதாரணமாக மின்னலினால் ஏற்படும் தண்டுக்கசிவு எத்தகைய சந்தர்ப்பமாக இருந்தாலும், தண்டுக்கசிவு நோய்தான் என்று உறுதிப்படுத்தினால் மேற் கூறிய முறைப்படி பரிகாரம் செய்து உடன் நோயைக் கட்டுப்படுத்தலாம்.

### போடோ கலவை

'போடோ கலவை' என்றால் என்ன? எப்படித் தயாரிப்பது என்பதனையும் சிறுதளவு பார்ப்போம். இது ஒரு பங்கஸ் கொல்லி ஆகும். இக் கலவை தயாரிப்பிற்கு மட்பாண்டங்களை உபயோகிக்கவும். ஒரு மரத்துக்குத் தேவையான அளவு வருமாறு:-

செப்புசல்பேற்று அல்லது துரிசு — 40 கிராம்.
நீறிய சுண்ணாம்பு — 40 கிராம். நீர்— ஒரு லீற்றர்

தண்டுக் கசிவு நோய்க்கு பரிகாரம் செய்வதற்கு கலவை முதல்நாள் இரவு செப்புசல்பேற்று பளிங்குகளை மட்பாத்திரத்தில் ½ லீற்றர் நீரில் ஊற விடவும். நீறிய சுண்ணாம்பினைப் புறம்பாக ½ லீற்றர் நீரில் கரைத்து மெல்லிய துணியில் வடித்தல் வேண்டும். பின்பு. இரண்டினையும் ஒன்றாக சேர்த்தல் வேண்டும். இக் கலவையை தயாரித்தவுடன் பாவித்தல் வேண்டும். பங்கஸ் நாசினிகள் நச்சுத் தன்மை வாய்ந்தமையினால், மிகவும் அவதானமாகவும், கவனமாகவும் கையாளப்பட வேண்டும்.

எனவே, தற்பொழுது, வேகமாகப் பரவி வரும் இந் நோயினையும், பீடைத் தாக்கத்தினையும் உடன் கட்டுப்பாட்டுக்குள்கொண்டு வருவோமாயின், தேங்காயின் விளைச்சலைக் கூட்ட முடியும்.

எனவே மேலதிக விவரங்கள் தேவைப்படுமானால் தெங்கு செய்கையாளர்கள் தென்னைஅபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையம், நல்லூர் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். அத்துடன் இது சம்பந்தமான பயிற்சி வகுப்புகளை நடத்த விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலம் ஒரு வருடம் நீடிப்பு!

கொழும்பு, மார்ச் 3

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள உள்ளூராட்சிஅதிகாரசபைகளின் பதவிக்காலம் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி வரை — மேலும் ஒரு வருட காலத்துக்கு — நீடிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை. திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் உள்ள 36 பிரதேச சபைகள் மற்றும் வவுனியா, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நகரசபைகள் ஆகியவற்றினது பதவிக்காலம் அடுத்த மாதம் 3ஆம் திகதியுடன் முடிவடைய இருந்தது. அதுவே தற்போது மேலும் ஒரு வருட காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

(உ–9)

# ஜே. வி. பியில் இருந்து பிரிந்தோர் புதிய அரசியல் கட்சி அமைத்தனர்

கொழும்பு, மார்ச் 3

ஜனதா விமுக்தி பெரமுனவிலிருந்து(ஜே.வி.பி.) வெளியேறியவர்கள் ஜனதா விமுக்தி சகயோகித பெரமுன (மக்கள் விடுதலை ஒத்துழைப்பு முன்னணி) என்ற புதிய அரசியல் கட்சியொன்றை அமைத்துள்ளனர்.

இக்கட்சியின் தலைவராக கலாநிதி கமல் கருணாதிலக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் இதுபற்றி அறிவிக்கப்பட்டது.

''ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) மீண்டும் ஆயுத போராட்டத்திற்குத் திட்டமிட்டு வருகின்றது. இது இந்தநாட்டிற்குப் பொருத்தமானதல்ல அதனால்தான் பலர் வெளியேறிவிட்டனர் என்று கமல் கருணாதிலக அம்மாநாட்டில் தெரிவித்தார்.

(ஐ–21)

## தமிழ்த்தினப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 3

''தூண்டி'' தமிழ்ச் சஞ்சிகையினர் நடத்தும் தமிழ்த்திறன் போட்டிகள் இன்று செவ்வாய் காலை 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

## சதுரங்க சாம்பியன்



கொழும்பு மாணவர்களிடையே ஸ்ரீலங்கா சதுரங்கச் (செஸ்) சம்மேளனம் நடத்திய சதுரங்கப் போட்டிகளில் 19 வயதுடைய தமிழ் மாணவரான எஸ். ஜே. குமணதான் பங்குபற்றிய அனைத்து ஆட்டங்களிலும் வெற்றியீட்டி சாம்பியனாகினார்,

சுமார் நான்கு மணிநேரம் நீடித்த இறுதியாட்டத்தில் கொழும்பு றோயல் கல்லூரியைச் சேர்ந்த துமிந்தா முனசிங்கவை அவர் தோற்கடித்தார்.

தற்போது கொழும்பு இந்துக் கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் எஸ். ஜே. குமண, தமது சிறு வயது முதல் 1996 ஆம் ஆண்டு வரை ஏழு ஆண்டுகள் யாழ். இந்துக் கல்லூரியில் கல்வி பயின்றவர். யாழ்ப்பாணத்தில் கல்வி பயின்ற காலத்தில் இங்கும் சதுரங்கத்தில் சிறந்த வீரராக அவர் விளங்கி யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற பல போட்டிகளில் சாம்பியனானவர் என்பதும், யாழ். சதுரங்க வட்டாரங்களில் நன்கு பரிச்சயமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது 152 மாணவர்கள் பங்கு பற்றிய — 10 சுற்று வட்டங்களைக் கொண்ட போட்டியில் அவர் சாம்பியனாகியிருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மின் கேபிள்கள் சேதம்

மட்டக்களப்பு, மார்ச் 3

மட்டக்களப்பு – வாழைச்சேனை வீதியில் மாவடிவேம்பு என்னுமிடத்தில் நேற்றுக் காலை மின் கேபிள்கள் உட்பட மின் உபகரணங்கள் இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டன.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான 'லக்ஸபான' பிரதான மின்விநியோகம் 8 மணித்தியாலம் துண்டிக்கப்பட்டிருந்தது. (ஐ–21)

## தொழிலாளர் இருவர் காயம்

யாழ்ப்பாணம் மார்ச் 3

வீட்டுக்குக் கூரைத் தகடு அடித்துக் கொண்டிருந்த வேளை சாரமரம் முறிந்து கீழே விழுந்து இருவர் காயமடைந்தனர்.

கோப்பாய் வடக்கில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஆறுமுகம் சிவநாதன் (வயது 51), கந்தவனம் சண்முகநாதன் (வயது 50) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர். காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ–15)

# படையினரிடம் பிடிபட்ட நால்வர் நாளை விடுதலை

வவுனியா, மார்ச் 3

நெடுங்கேணிப் பகுதிக்கு வீடு பார்க்கச் சென்ற சமயம் அண்மையில் படையினரிடம் சிக்கிய நால்வர் நாளை கெப்பிட்டிக்கொலாவ நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட உள்ளனர்.

படையினரிடம் சிக்கிய இவர்கள் நால்வரும் வெலிஓயா இராணுவத்தினரால் கெப்பிட்டிகொலாவப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நாளை விடுவிக்கப்படவுள்ள இவர்களைப்பொறுப்பேற்க உறவினர்கள் வரமுடியாததால் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பாளர் சிவநாதன் கிஷோர் இவர்களைப் பொறுப்பேற்பார்.

முள்ளியவளையைச்சேர்ந்த கனகர் வேலுப்பிள்ளை, கனகர் ரட்ணம், நடராசா மனோகரன், இராசையா பரமலிங்கம் ஆகியோரே படையினரிடம் சிக்கியவர்களாவர்.

(ஐ–164 )

# புங்குடுதீவுப் பகுதியில் மீனவர் மீது தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 3

கரையோரக் கடற்பிராந்தியத்தில் கடற் தொழில் செய்து கொண்டிருந்தவர்களை நோக்கிச் சென்ற கடற்படையினர் அவர்களை துப்பாக்கி அடிப்பாகத்தாலும், கை கால்களினாலும் பலமாக அடித்துத் தாக்கியதாகக் கூறப்படுகின்றது. அதில் ஒருவர்படுகாயமடைந்தார்.

புங்குடுதீவு கடற்பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் புங்குடுதீவைச் சேர்ந்தநாகமணி தயபாலசிங்கம் ( வயது 33 ) என்பவரே படுகாயமடைந்தவராவார் இவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவருடன் கூடச்சென்ற மற்றைய இருவர் சிறு தாக்குதல்களுடன் காயமின்றித் தப்பிக்கொண்டனர்.

(உ–15–139)

# ஓய்வூதிய நிலுவைப்பணம் இம்மாதம் கிடையாது

ஓய்வூதியர்களுக்கு இம்மாதம் வழங்கப்படவிருந்த 18 மாத விசேட படி 260 ரூபாவை தற்காலிகமாக நிறுத்துமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் திணைககளம் சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளது.

ஓய்வூதியர்களுக்கு வாழ்க்கைப்படியாக 260ரூபா வீதம் 18 மாதங்களுக்கான நிலுவைப்பணம் பெப்ரவரி மாதத்தில் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் 18 மாதப் பாக்கிப் பணம் இம் மாதத்தில் வழங்க ஏற்பாடாகியிருந்தது.

இந்நிலையில் இந்தக் கொடுப்பனவை தற்காலிகமாக நிறுத்திவைக்குமாறு ஓய்வூதியப் பணிப்பாளர் திணைக்களம் சகல செயலகங்களையும் கேட்டுள்ளது.

(இ–3)

# பிரதமரை சந்தித்து ஸ்ரீமணி பேச்சு

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவியான ஸ்ரீமணி அத்துலத்முதலி பிரதம மந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா சகிதம் அவர் இப்பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டார்.

மாகாணசபைத் தேர்தலில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளர் பட்டியலில் போட்டியிடுவதென்றால் மேல் மாகாண முதலமைச்சர் பதவி தமக்கு வழங்கப்பட வேண்டும் என ஸ்ரீமணி அத்துலத்முதலி விரும்புகின்றார் என்றும் —

இல்லையேல் அவர் ஐ.தே.கவுடன் இணைந்து கொள்வார் என்றும் அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுறது.

(ஐ–21)

# மகளிர் தினத்தையொட்டி நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 3

சர்வதேச மகளிர் தின விழாவை முன்னிட்டு மகளிர் அபிவிருத்தி நிலையம் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம்பெறும் மகளிர் தின விழாவின் போது இந் நிகழ்ச்சிகள் இடம் பெற ஏற்பாடாகியுள்ளதாக மகளிர் அபிவிருத்தி நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

''பெண்ணியம் தேவையற்ற தொன்றா?'' என்ற தலைப்பிலான ஆய்வரங்கு மற்றும் மகளிர் கைவினைப் பொருள்களின் கலைத்துவத்தை வெளிப்படுத்தும் வகையிலான கண்காட்சி முதலியனவும் சிறப்பு நிகழ்ச்சிகளாக அன்றைய தினம் இடம் பெறுமெனவும் —

அதேவேளை மகளிர் அபிவிருத்தி நிலைய கல்வி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வட்டு இந்துக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச ம. வி., சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு அன்றைய தினம் புலமைப்பரிசில் வழங்கும் வைபவம் இடம் பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ–7)

# அதிபர் தரங்களை அதிகரிக்க சிபார்சு

கொழும்பு, மார்ச் 3

அதிபர் சேவையிலுள்ள முரண்பாடுகளைக் கண்டறிய நியமிக்கப்பட்ட அபேரத்ன குழு அதிபர் தரங்களை 3இல் இருந்து 5 ஆக்க வேண்டும் எனச் சிபார்சு செய்துள்ளதாக கல்லூரி அதிபர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அபேரத்ன குழுவின் அறிக்கை 3 மாதங்களுக்கு முன்னர் கல்வி உயர்கல்வி அமைச்சரிடம் கையளிக்கப்பட்ட போதிலும் அது குறித்து எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமல் இரகசிய ஆவணமாகவே பாதுகாக்கப்படுகிறது என கல்லூரி அதிபர்கள் சங்கம் குற்றஞ் சாட்டியுள்ளதாக ''லங்காதீப'' பத்திரிகை தெரிவித்தது.

(ஐ–10)

## மெய்வல்லுநர் போட்டிகள்

சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் க. நல்லையா தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானைக் கோட்டக்கல்வி அதிகாரி ஆ. வ. கணேசலிங்கமும் சிறப்பு விருந்தினராக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபர் செல்வி போ. கந்தசாமியும் கலந்து கொள்வார்கள். (இ–8)

★ ★ ★

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் வருடாந்தஇல்ல மெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ஆ. இராஜகோபால் தலைமையில் நடைபெறும்.

நல்லூர்க் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. அருளானந்தம் பிரதம விருந்தினராகவும், முன்னாள் அதிபர் மு. பரமேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். (ஐ–9)

★ ★ ★

இணுவில் இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் க. கனகராசா தலைமையில் நடைபெறும்.

உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் சிறப்பு விருந்தினராகவும், தொழிலதிபர் து. சிவராசா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (இ–152)

## கிளை திறந்துவைப்பு

பாவனையாளர்களின் வசதி கருதி அல்லைப்பிட்டிப் பகுதியில் வேலணை பல. நோ. கூ. சங்கத் தலைவர் செ. சிவலோகநாதனால் புதிய விற்பனை கிளை நிலையம் ஒன்று திறந்துவைக்கப்பட்டது. (இ–111)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.

முதலாம் பி. எஸ். எம். எஸ். 1996/97 கல்வியாண்டு

சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கான

விரிவுரைகள்

முதலாம் வருட பி.எஸ். எம். எஸ். 96 / 97 கல்வியாண்டு மாணவர்களுக்கான முதலாந் தவணை விரிவுரைகள் எதிர்வரும் 1998-03-09 ஆம் திகதி திங்கட்கிழமை மு. ப. 9–00 மணிக்கு கைதடியிலமைந்துள்ள சித்த மருத்துவத் துறையில் ஆரம்பமாகவுள்ளன. பதிவு செய்த மாணவர்கள் தவறாது விரிவுரைகளுக்குச் சமுகமளிக்கவும்.

— பதிவாளர்

(சி/3018)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### வாகனங்களுக்கான

## பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டது

கொழும்பு, மார்ச் 3

யாழ். மாவட்டத்தில் வாகனச் சொந்தக் காரர்கள் தமது வாகனங்களுக்கு இந்த ஆண்டுக்கான அனுமதிப்பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ் ஆகியவற்றைப் பெறுவதை ஊக்குவிப்பதற்காக பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வாகனச் சொந்தக்காரர்களும் பிரதேச செயலாளரிடம் இந்த ஆண்டுக்கான வாகன அனுமதிப் பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ், வாகன உரிமைப் பத்திரம் ஆகியவற்றைக் காண்பித்து தமது வாகனங்களுக்கு பெற்றோல் பெறுவதற்கான அனுமதியைப் பெறல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் பிரதேச செயலாளருக்கு விண்ணப்பித்து எத்தகைய கட்டுப்பாடும் இன்றி பெற்றோலைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

பெற்றோல் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டதை அடுத்து வெளிச் சந்தையில் அதன் விலை அதிகரித்துள்ளது. (ஐ-9)

## அந்தமானில் காங்கிரஸ்

போட்பிளயர், மார்ச் 3

அந்தமான், நிக்கோபார் தொகுதியில் 10 ஆவது முறையாக காங்கிரஸ் கட்சி வெற்றியீட்டியுள்ளது. காங்கிரஸ் வேட்பாளர் மனோரஞ்சன் பக்தா பாரதீய ஜனதாக் கட்சி வேட்பாளரை விட 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுள்ளார். (ஐ)

# முக்கிய சந்தைகளுக்கு நவீன கட்டட வசதிகள்

## அமெரிக்க உதவி பெற முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ். குடாநாட்டில் உள்ள சந்தைகளை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் —

சுன்னாகம், மருதனார்மடம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் புதிய நவீன சந்தைக் கட்டடங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இது தொடர்பான திட்டம் தயாரிக்கப்பட்டு ஐ. நா. அபிவிருத்தி திட்டத்திடம் யாழ். செயலகத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க உதவியுடன் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த பேச்சுக்கள் நடைபெறுகின்றன.

இத்திட்டத்துக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பாக கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்க தூதுக்குழு நேரடியாக ஆராய்ந்தது.

அதேநேரம் — யாழ். நகரில் ''சுப்பர் மார்க்கெட்'' ஒன்று அமைக்கவேண்டும் என்று இந்தக் குழுவிடம் கோரப்பட்டதாக வெளியான தகவல் குறித்து யாழ். செயலகத்துக்கு தெரியவரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தேர்தலுக்காக அனுப்பப்பட்ட பஸ்கள் ஓடத் தகுதியானவையா?

யாழ். உள்ளூராட்சித் தேர்தல் பணிக்காக அனுப்பப்பட்ட 100 பஸ்களைப் பொறுப்பேற்க வடபிராந்திய போக்குவரத்துச் சபை பின்னடித்து வருவதற்கு தீர்வு காண கொழும்பில் இருந்து மூன்று அதிகாரிகள் கொண்ட குழு ஒன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வர இருக்கிறது.

தேர்தல் பணிக்காக எடுத்து வரப்பட்ட 100 பஸ்களை வடபிராந்திய போக்குவரத்துச்சபையைப் பொறுப்பேற்குமாறு போக்குவரத்து அமைச்சர் ஏ. எச். எம். பௌசி பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்தபஸ்கள் பழுதானவை என்றும்—

அவற்றில் பெரும்பான்மையானவை ஓடக்கூடிய நிலையில் இல்லை என்றும்—தெரிவித்து அவற்றை ஏற்க வடபிராந்திய போக்குவரத்துச் சபை பின்னடித்து வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பஸ்களின் நிலை குறித்து நேரில் பரிசோதனைகளை மேற் கொள்ள மூன்று அதிகாரிகள் கொண்ட குழு ஒன்றை அமைச்சர் பௌசி அடுத்தவாரம் யாழ்ப்பாணத்துக்கு அனுப்புவதாகவும் — அந்தக் குழுக்களின் அறிக்கையைப் பொறுத்து அமைச்சர் இது தொடர்பாக முடிவை எடுப்பார் என்றும்—தெரிவிக்கப்பட்டது.

## நடிகர் சரத்குமார் தோல்வி

புதுடில்லி, மார்ச் 3

தமிழ்நாட்டில் திருநெல்வேலியிலே போட்டியிட்ட நடிகர் சரத்குமார் தோல்வியடைந்துள்ளார். அந்தத் தொகுதியிலே கடம்பூர் ஜனார்த்தனம் என்ற அ. தி. மு. க. வேட்பாளர் வெற்றி பெற்றுள்ளார். (ஐ–9)

## முடிவுகள் இப்படி அமையலாம்?

புதுடில்லி, மார்ச் 3

இந்திய நாடாளுமன்றத் தேர்தல்களின் ஆரம்ப முடிவுகள் வெளியான நிலையில் — இறுதியாக கூட்டணிக் கட்சிகளுக்குக் கிடைக்கக் கூடிய — ஆசனங்களின் எண்ணிக்கை ஓரளவு ஊகித்து வெளியிடப்பட்டது. அதன் விவரம் வருமாறு:-

| | | | | |
|---|---|---|---|---|
| ★ | பாரதிய ஜனதா | — | 249 | + |
| ★ | காங்கிரஸ் | — | 147 | + |
| ★ | ஐ. முன்னணி | — | 95 | + |
| ★ | ஏனையவை | — | 42 | + |

(உ)

### துரையப்பா...

(முதலாம் பக்கத் தொடர்)

துணைவேந்தர் கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் உட்படப் பல்வேறு பிரமுகர்கள் இந்த நிகழ்வில் பங்குபற்றினர்.

துரையப்பா ஸ்ரேடியம் திறந்து வைக்கப்படுவதை ஒட்டி அங்கு நடைபெற்ற கண்காட்சி வலைப்பந்தாட்டத்தில் யாழ். பிரதேச செயலர் பிரிவு அணியை நல்லூர் பிரதேச செயலர் பிரிவு அணி தோற்கடித்தது. கண்காட்சி உதைபந்தாட்டத்தில் யாழ்ப்பாண உதைபந்தாட்ட லீக் அணி, பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அணியை சமநிலைத் தவிர்ப்புக்காக வழங்கப்பட்ட 'பெனால்டி' உதை மூலம் வென்றது.

முன்னதாக நிகழ்ச்சிக்குப் பங்குபற்ற வந்த பிரதம அதிதியான பிரிகேடியர் சாந்த கொட்டேகொடவையும் ஏனைய அதிதிகளையும் யாழ். வேம்படி மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றின் மாணவிகள் 'பாண்ட்'' இசைத்து வரவேற்றனர்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட யாழ். நகர மேயர் திருமதி சரோஜினிதேவி யோகேஸ்வரன் நேற்றைய நிகழ்ச்சியில் பங்குபற்றவில்லை. (ஐ-உ)

### ஸ்ரீபெரும்புதூரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தில் முன்னணி வகித்தார்.

இராமநாதபுரத்தில் அ. தி. மு. க. வேட்பாளர் சத்தியமூர்த்தி தி. மு. க. வேட்பாளரை விட ஒரு லட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் முதலிடத்தில் திகழ்ந்தார்.

பெரியகுளம் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளரான முன்னாள் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா முன்னணியில் திகழ்ந்தார். (ஐ)

### மதுரையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

க. கூட்டணி வேட்பாளர் அமைச்சர் டி. ஆர். பாலு, பாரதீயஜனதா வேட்பாளர் ஜனா கிருஷ்ணமூர்த்தியைத் தோற்கடித்தார்.

திருச்செந்தூரில் மத்திய இணை அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன் 15 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தார். அவரை எதிர்த்துப் போட்டியிட்ட அ.தி.மு.க. வேட்பாளர் நடிகர் ராமராஜன் முன்னிலையில் திகழ்ந்தார். (ஐ)

### சிவகங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ரான தொழில் அமைச்சர் முரசொலி மாறன் வெற்றியீட்டினார்.

நீலகிரி தொகுதியில் பாரதீய ஜனதாக் கட்சி வேட்பாளர் மாஸ்ரர் மதன், மத்திய இணை அமைச்சர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியத்தை தோற்கடித்தார்.

திருநெல்வேலித் தொகுதியில் தி. மு. க. வேட்பாளரான சரத்குமார் அ. தி. மு. க. வேட்பாளர் எம். ஆர். ஜனார்த்தனிடம் தோற்றுப் போமூார். (ஐ)

### அ.தி.மு.க...

(முதலாம் பக்கத் தொடர்)

சில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பில் அமைச்சர்களாக இருந்த எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், தனுஷ்கோடி ஆதித்தன் ஆகியோர் தோல்வியடைந்தனர்.

திருச்செந்தூர் தொகுதியில் அ. தி. மு. க. வேட்பாளராக போட்டியிட்ட நடிகர் ராமராஜனிடம் அமைச்சர் தனுஷ்கோடி ஆதித்தன் தோற்றுப் போனார்.

குஜ்ராால் அரசில் அமைச்சர்களாக இருந்த தி. மு. க. வினரான முரசொலிமாறன், ரி. ஆர். பாலு ஆகியோர் வெற்றியீட்டினர், (உ-ஐ–9)

எமது புதிய வெளியீடு!
ஜெய்ஜெகதீஸ் - பவ்யா நடித்த
★ அக்னி பூஜை
(மர்மம் நிறைந்த படம்)
விக்னேஷ் - இந்திரஜா
★ வேலை
புதிய படப் போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3019)

எமது வீடியோ CD வெளியீடு!
நெப்போலியன் நடித்த
பகவத்சிங்
புதிய போஸ்டர்களும் விற்பனைக்குண்டு.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3021)

விற்பனைக்கு
புத்தம் புதிய
SANYO
வீடியோ
புறொஜெக்ரர்
(Video Projector)
விற்பனைக்குண்டு.
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(சி/3020)

யாழ். — கொழும்பு
பயணிகளுக்காக
புதிய — சொகுசு — விமானசேவை
மொனரா ஏயர் சேர்விஸ்
காலையில் நேரத்துடன் உங்களைக் கொழும்புக்குக் கூட்டிச் செல்ல
அன்பு, அரவணைப்பு, பணிவுடன்
சேவையாற்ற முன்வந்துள்ள
ஒரே விமான சேவை நிறுவனம் இது!
விமானத்தில் பயணம் செய்ய அனுமதி பெற்றவர்கள் காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்குச் சமுகம் தந்து ரிக்கெற்றுக்களைப் பெற்று நேரத்துடன் கொழும்புக்கு விரையலாம்.
விமான ரிக்கெற்றுக்களை
பின்வரும் இடங்களிலும் பதிவு செய்யலாம்:-
★ யாழ். சிவில் நிர்வாக அலுவலகம்
★ மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/3022)

உ
சிவமயம்
வாழ்த்துகின்றோம்
கவிமாமணி இயல் இசைவாரிதி கலாரத்நா கலாபூஷணம்
பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணி ஐயர்
அவர்களுக்கு
"கௌரவ பாராட்டுப் பட்டமளிப்புப் பெருவிழா"
இணுவைவாழ் மக்களும் யாழ். மாவட்ட ஆலய பரிபாலன சபைகளும் கலைஞர்களும் நண்பர்களும் இசைப்பிரியர்களும் இணைந்து நடத்த முன்வந்ததையிட்டுப் பெருமகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இவ்விழா 29 - 03 - 1998 ஞாயிறு காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் என்பதையும் அறிந்து வரவேற்று வாழ்த்திப் பெருமகிழ்வடைகின்றோம்.
உரிமையாளர்
[F] பாசன் ஹவுஸ்
65, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
[52775]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03 – 03–1998 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org